பக்கங்கள்: 12 விலை: 20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 32 சனிக்கிழமை 15.06.2019 கதிர் 222

### இனி இது ரகசியம் அல்ல!

"பாதுகாப்பு ஏதுமின்றி நேரில் வந்து ஆவா குழுவுடன் பேசத் தயார்" – என்ற வடக்கு ஆளுநரின் அறிவிப்பைக் கேட்டதும் எனக்குச் சில பழைய நினைவுகள் பொத்துக் கொண்டு வந்தன.

இப்படித்தான் அப்போது

பக்கம் 02 »

## விபத்தில் சிக்கிய இளைஞர் வைத்தியசாலையில் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 19 வயதுடைய இளைஞர் ஒருவர்

பக்கம் 11 »

## நாடு திரும்பினார் ரணில்

கொழும்பு, ஜூன் 15

சிங்கப்பூருக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு சென்றிருந்த பிரதமர் ரணில்

பக்கம் 11 »

## தமிழர் விரும்பாத இடங்களில் இருந்து புத்தர் சிலைகளை நாம் அகற்றுவோம்



### யாழ்ப்பாணத்தில் கூறினார் அத்துரலிய தேரர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

இந்து ஆலயங்களில் புத்தர் சிலை வைக்கப்படுவதைத் தமிழ் மக்கள் விரும்பவில்லையாயின் அதற்காக நீதிமன்றம் செல்லத் தேவையில்லை, பொலிஸ் நிலையம் செல்லத் தேவையில்லை எனக் கூறியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், தமிழ் மக்கள் விரும்பாத இடங்களில் இருந்து புத்தர் சிலைகளை

பக்கம் 11 »

# பாதுகாப்பு ஏற்பாடு ஏதுமின்றி ஆளுநர் ஆவா குழுவுடன் நேரில் பேசத் தயார்!



## அவரே பகிரங்க அழைப்பு



யாழ்ப்பாணம், ஜூன்15

"எந்தவொரு பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றிச் சென்று ஆவா குழுவுடன் நேரில் கலந்துரையாடுவதற்கு நான் தயாராகவுள்ளேன்."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

கொக்குவில் ரயில் நிலைய அதிபர் மீதான தாக்குதல் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

பக்கம் 11 »

## ஆடைத் தொழிற்சாலையில் நேற்றுப் பெரும் தீ விபத்து!



கொழும்பு, ஜூன் 15

குருணாகலில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று அதிகாலை பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னல – இரபடகம பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடை ஏற்றுமதி தொழிற்சாலையிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. மூவாயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள்

பக்கம் 11 »

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் ராஜபக்ஷ அணிக்கு நேரடித் தொடர்பு!

### உண்மைகளை மூடிமறைப்பதற்கு மைத்திரி முயற்சி என்கிறார் ராஜித



கொழும்பு, ஜூன் 15

மஹிந்தவும் கோட்டாபயவும்தான் சஹ்ரான் குழுவினருக்குத் தீனிபோட்டு வளர்த்துள்ளனர். எனவே, உயிர்த்த ஞாயிறு

பக்கம் 11 »

## பயங்கரவாதத்தின் கோரமுகத்தை இலங்கை சென்றபோது கண்டேன்!



### இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு

கிஸ்கெக், ஜூன் 15

பல அப்பாவி உயிர்களைப் பலிவாங்கிய பயங்கரவாதத்தின் கோரமுகத்தை இலங்கைப் பயணத்தின்போது பார்த்தேன் என கிர்கிஸ்தான் தலைநகர்

பக்கம் 11 »

## கைதாகியுள்ள மௌலவிக்கு 4 மனைவியர், 28 பிள்ளைகள்!

### கதி கலங்கிப்போன பொலிஸார்

கொழும்பு, ஜூன் 15

அண்மையில் நடந்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் தொடர்பில் பொலிஸார் வியப்பு அடைந்துள்ளனர்.

பக்கம் 11 »

## ஓ.எல்., புலமைப்பரிசில் பெறுபேற்றின் தேசிய தரப்படுத்தல் இனி வெளியாகாது

கொழும்பு, ஜூன் 15

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை என்பவற்றின் தேசிய மட்ட தரப்படுத்தல் முடிவுகள் இனி வெளிப்படுத்தப்படமாட்டாது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பக்கம் 11 »

## உங்கள் காலைக்கதிர் அதிகாலையே இலவசமாக இனி உங்களைத் தேடி வரும்

அன்பு வாசகர்களே!

மாறி வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி உங்கள் 'காலைக் கதிர்' நாளிதழை தினசரி அதிகாலையில் உங்கள் 'ஸ்மாட் போன்' வாயிலாக உங்கள் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்யும் ஏற்பாட்டைச் செய்து வருகிறோம்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

உங்களின் மின்னஞ்சல் முகவரி, 'வாட்ஸ் அப்', 'வைபர்', முகப்புத்தகம் அல்லது அது போன்ற சமூக வலைத்தள தொடர்பில் ஏதேனும் ஒன்றின் விவரத்தை கீழ்வரும் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி உதவுங்கள்.

அந்த முகவரிக்கு தினசரி விடிகாலையில் எமது பத்திரிகை தவறாது கிட்டும்.

வடக்கிலும், கிழக்கிலும், இலங்கை முழுவதிலும், புலம்பெயர் தேசங்களிலும் இருக்கும் எமது பல்லாயிரம் வாசகர்களுக்கும் இலவசமாக விடிகாலையில் எமது பத்திரிகையைத் தவறாது கிடைக்கச் செய்யும் இத் திட்டம் மூலம் 'காலைக்கதிர்' தனது அனைத்து வாசகர்களையும் ஒன்றிணைக்கும் என நம்புகிறோம்.

உங்கள் தொடர்பு முகவரியை நீங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் விலாசம்

kalaikkathirpaper@gmail.com

தொலைபேசி இல. – 021 222 3000

**நிர்வாகம்.**

# பாதுகாப்புத்துறை சரியாகச் செயற்பட்டிருப்பின் பயங்கரவாதத் தாக்குதலைத் தடுத்திருக்க முடியும்

## வியாழேந்திரன் எம்.பி. கூறுகின்றார்



மட்டக்களப்பு, ஜூன் 15

பாதுகாப்புத் துறையினர் தங்களது கடமைகளைச் சரியான முறையில் செய்திருந்தால் ஏப்ரல்-21 பயங்கரவாதத் தாக்குதல்களை தடுத்திருக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு வேபர் குடியிருப்புப் பகுதியில் ஏப்ரல் 16ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்பு குறித்து முறையான விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தால் ஏப்ரல் தாக்குதல் இடம் பெற்றிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலக அபிவிருத்திக்குழு கூட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஏப்ரல் 16ஆம் திகதிதொடக்கம் பணியில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் விசாரணை செய்யப்படவேண்டுமென ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர், சபாநாயகர் ஆகியோரிடம் நேரடியாக முறையிட்டும் இது வரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை-என்றார்.

# மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் தொடர்பான அறிக்கை நாடாளுமன்றுக்கு

கொழும்பு, ஜூன் 15

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் தொடர்பான அறிக்கை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி தொடர்பான மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர்,'அந்தநிறுவனம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கையூடாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காக கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர்ஹிஸ்புல்லா, அவரின் புதல்வர் மற்றும் குறித்த பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஆகியோர் குறித்த குழுவிற்கு நேற்றைய தினம் அழைக்கப்பட்டிருந்தனர்.

அந்த நிறுவனத்திற்கு எவ்வாறு நிதி கிடைத்தது என்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது- என்றார்.(ஐ)

# மட்டக்களப்புக் குண்டுதாரியின் சடலத்தை புதைக்க முடியாமல் திண்டாடும் பொலிஸ்

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட குண்டுதாரியின் சடலத்தை புதைக்க மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

தமது பிரதேசங்களில் அந்தச்சடலத்தைப்புதைக்க வேண்டாம் என்ற மக்கள் எதிர்ப்பின் காரணமாக மட்டக்களப்பு பொலிஸார் சடலத்தை புதைப்பதில் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி இடம் பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதியான காத்தான்குடியைச் சேர்ந்த முகமது நாசார் முகமது ஆசாத்தின் தலை மற்றும் உடற்பாகங்கள் மரபணு பரிசோதனையில் அவருடையவை என உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு அரச அதிபருக்குக் கட்டளை பிறப்பித்தார். இதனையடுத்து, பொலிஸார் சடலத்தை மட்டக்களப்பு விமான நிலையப் பகுதியில்உள்ளபுதுர்ஆலையடி இந்து கிறிஸ்தவ மயானப் பகுதியில் செவ்வாய்க்கிழமை அடக்கம் செய்ய முற்பட்டதையடுத்து அங்கு பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனையடுத்து பொலிஸார் சடலத்தை கடந்த புதன்கிழமை காத்தான்குடி பஸ் டிப்போக்கு அருகிலுள்ள முஸ்லிம் மயானத்தில் அடக்கம் செய்ய முற்பட்டடபோது அப்பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வீதியை மூடினர். நேற்று முன் தினம் மட்டக்களப்பு பொலனறுவை எல்லைப் பகுதியான ரிதென்னஇராணுவமுகாமுக்கு அருகில் வனபரிபாலனத் திணைக்களத்துக்கு சொந்தமானகாட்டுப்பகுதியில் புதைப்பதாக இருந்த நிலையில் அங்கும் மக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் தற்போது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கின்றது. (ஐ)

# பேண்தகு அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்த ஆளுநர் வலியுறுத்து



'பேண்தகு எதிர்காலத்தை நோக்கி'எனும்தொனிப்பொருளில் யாழ் முகாமையாளர்கள் அமையமும் Share Colombo Services அமைப்பும் இணைந்து யாழ் திண்ணை ஹோட்டலில் ஏற்பாடு செய்த கலந்துரையாடலின் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று முன்தினம் மாலை கலந்து சிறப்பித்தார்.

இதன்போது கருத்துதெரிவித்த ஆளுநர் இந்த அமையத்தினூடாக வடமாகாணத்தில் மேற்கொள்ளக்கூடிய பேண்தகு அபிவிருத்தி திட்டங்களில் கூடிய கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுவதால் இங்கு வாழும் வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் காணியில்லா மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்ப அடியை எடுத்து வைப்பதற்கும் முன்னுரிமையளித்து செயற்பட்டு வருகிறார் எனக் குறிப்பிட்டமையுடன் இதனுடன்தொடர்புபட்டதுறைகளுக்குத் தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குவதற்கு முன்வருமாறும் கோரிக்கை விடுத்தார்.

## இனி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷவும் கூறினார்.

2005 நவம்பரில் புதிய ஜனாதிபதியாக மஹிந்தர் பதவியேற்றகையோடு எனக்கு அலரி மாளிகையிலிருந்து அழைப்பு வந்தது. அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் எனக்கு முதல் சந்திப்பு.

வடக்கிலும், தெற்கிலும் இருந்து வெளியாகும் இரண்டு தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளுக்கு ஆசிரியன் என்ற கோதாவில் தரப்பட்ட மரியாதை அது. (அப்படி வெவ்வேறு இடங்களிலிருந்து வெளியாகும் இரண்டு நாளிதழ்களுக்கு ஒரே சமயத்தில் ஆசிரியராக செயற்படும் வாய்ப்புவேறு யாருக்கும் கிடைத்திருக்குமோ தெரியவில்லை. ஆனால், அப்போது நான் என்னைப் பிணைத்துக் கொண்டிருந்த நிறுவனம் என் மீது முழு நம்பிக்கை வைத்து, இரண்டு பத்திரிகைகளுக்கும் ஒரே சமயத்தில் ஆசிரியன் என்ற அந்தப் பெரும் பொறுப்பையும் பேறையும் எனக்குத் தந்திருந்தது.)

அத்தோடு, விடுதலைப் புலிகளின் தலைவர், மதியுரைஞர், அரசியல் பொறுப்பாளர் போன்றோரின் மதிப்புக்குரிய ஊடகவியலாளன் என்ற ஒரு கருத்து நிலவியமையும் மஹிந்தரின் மரியாதைக்குரிய அந்த அழைப்புக்குக் காரணம்.

அந்தச் சந்திப்பின் போது மஹிந்தர் பின்வருமாறு கூறினார்:-

*"சரியோ,பிழையோ அடுத்த 12 வருடங்களுக்கு நான்தான் இந்த நாட்டின் ஜனாதிபதி. அதில் மாற்றம் ஏதும் வரவே வராது என்பதை உங்கள் நண்பர்களிடம் ( விடுதலைப் புலிகளிடம்) போய் விளக்கிச் சொல்லுங்கள்.*

*"என்னால் ஈழம் தரமுடியாது. அதை விட எல்லாம் தரத் தயார். 13 ஆவது திருத்தத்துக்கு மேல் தரக்கூடியவை எல்லாம் தருவேன். அதற்குச் சித்தமாக இருக்கிறேன்.*

*"கடந்த பதினொரு வருடங்களாக சந்திரிகாவைப் பொறுத்த நீங்கள் பதினொரு மணி நேரம் கூட என்னைப் பொறுக்க வில்லை. நான் பதவியேற்ற கையோடு - உடனேயே -அரச படைகள் மீதான தாக்குதல்களை ஆரம்பித்து விடுகிறீர்களே.... இது நியாயமா?*

*"புலிகளின் தலைவரோடு தான் பேச வேண்டுமானால் நானே வன்னிக்கு -முல்லைத் தீவுக்கு - நேரில் வருவேன். பாதுகாப்பு இன்றி வந்து பேசவும் தயார்.*

*"சமாதானத்துக்கான தேடலுக்காக மேலும் ஒரு மைல் ( Extra mile) நடக்கவும் நான் தயாராக இருக்கிறேன் என்று உங்கள் நண்பர் அன்ரன் பாலசிங்கத்திடம் விளக்கமாகக் கூறுங்கள்"*

- இப்படித்தான் புலிகளைப் பேச்சுமேசைக்கு இழுப்பதற்கான கொக்கியை மட்டினார் மஹிந்தர்.

ஓரிரு வருடங்கள் பேச்சு மேசையில் புலிகளை வைத்திருப்பதன் மூலம் - கிடைக்கும் கால அவகாசத்தில் - அது வரை சிதறுண்டு கிடந்த தனது அரசுப் படைகளை மீள ஒழுங்கமைத்துச் சீரமைக்கும் நேரத்தைப் பெற்றுக் கொள்வதே அவர் தந்திரமாக இருந்திருக்கும் போல.

கடைசியில் பேச்சு முயற்சி மூலம் அந்தக் கால அவகாசம் கிடைத்தது. அவரது தந்திரம் வென்றது.

2006 சமாதான முயற்சிகள் குழம்பி மீண்டும் யுத்தம் வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்ட போது மீண்டும் மஹிந்தரை அடிக்கடி சந்திக்க வேண்டி நேர்ந்தது. அவையும் அலரி மாளிகையில் தான் நடந்தன. அப்போது ஒரு தடவை நான் அவரிடம் கேட்டேன்:-

*"தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவதாயின் நானே நேரில் வருவேன் என்றீர்களே... இப்போதைய பதற்ற நிலையைத் தணித்து, மீண்டும் சுமுகமான - இணக்கமான - நிலையை ஏற்படுத்துவதற்காக நேரில் போய்ப் பிரபாகரனுடன் பேசலாமே...? வாங்களேன் முல்லைத் தீவுக்குப் போகலாம்"* - என்றேன் நான்.

*"அப்போ...!"* - என்று சிங்களத்தில் சீறினார் ஜனாதிபதி மஹிந்தர். பின்னர் சுதாகரித்துக் கொண்டார் .

*"நான் வரத் தயார். எனக்கு நாடும் அமைதியும் தான் முக்கியமானவை. ஆனால் பாதுகாப்பு அதிகாரிகள் அதற்குத் தாம் இடம் கொடுக்க மாட்டார்கள் என்று கூறிவிட்டார்கள்"* - என்று சமாளித்தார் அவர்.

பின்னர் நடந்தவை எல்லாம் நாட்டுக்கும் மக்களுக்கும் தெரிந்த விடயங்கள்தாம்.

*"பாதுகாப்பு ஏற்பாடுகளின்றி முல்லைத்தீவுக்கும் நேரடியாக வந்து பிரபாகரனுடன் பேசத் தயார்''* - என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 2005 அறிவிப்புப் போல இப்போது ஆவா குழுவினருடன் பாதுகாப்பு ஏற்பாடுகளின்றி வந்து பேசத் தயார் என்றவடக்கு ஆளுநரின் அறிவிப்பு அமையாவிட்டால் சரி.

-மின்னல்

# முல்லைத்தீவு செல்வபுரத்தில் பற்றி எரிந்த பனங்கூடல்கள்!





முல்லைத்தீவு, ஜூன் 15

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் நேற்று முன் தினம் மக்கள் குடியிருப்புக்கு அண்மையில் பனங்கூடலில் ஏற்பட்ட தீ பரவியதில் அதிகளவான பனை மரங்கள் எரிந்துள்ளன. அத்துடன் மக்களின் பொருள்கள் சிலவும் தீயில் கருகி நாசமாகின.

செல்வபுரம் மக்கள் குடியிருப்புக்கு அருகில் உள்ள பனங்கூடலுக்குள் திடீரென பற்றிய தீ பனங்கூடல் முழுதும் பரவியுள்ளது.

இந்தத் தீவிபத்து தொடர்பில் அருகில் உள்ள மக்கள் பொலிஸாருக்கும் படையினருக்கும் தெரியப்படுத்தினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த படையினர், பொலிஸார் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள் மற்றம் மாவட்ட செயலக ஊழியர்கள் ஆகியோர் இணைந்து தீயைத் தண்ணீர் பாய்ச்சி அணைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக பனைமரக்கூடல்கள் அடிக்கடி தீபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# பயங்கரவாதிகளுக்கு ரிஷாத் உதவவில்லை!

## மு.கா. திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 15

சஹ்ரான் ஹாசீமுனுடன் ரிஷாத் பதியுதீன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், அவர் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தார் என்றும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் பொய் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

ஏப்ரல் 21 குண்டுவெடிப்பைத் தொடர்ந்து இந்த நாட்டு முஸ்லிம்கள் இனவாத நெருக்குதல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அதன் ஓரங்கமாகவே முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகும் சம்பவம் நிகழ்ந்தது.

ரிாத் பதியுதீன் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவர் சஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தார் என்றும் குற்றம் சுமத்தி அத்துரலியதேரர் அவருக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததோடு உண்ணாவிரதப் போராட்டத்திலும் இறங்கினார்.

ரிஷாத் மீது சுமத்தப்பட்டிருப்பது அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டாகும். மனச்சாட்சியுடன் கூறுகின்றேன். அவர் சஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தார் என்றும் கூறப்படுகின்றமை இனவாத ரீதியான தாக்குதலாகும்.

அவர் உண்மையில் சஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை இராஜிநாமா செய்வதற்கு நான் அனுமதி வழங்கி இருக்க மாட்டேன் – என்றார். (ஐ)

# வவுனியா வைத்தியசாலை முன்பாக ராஜிதவுக்கு எதிராகப் போராட்டம்







வவுனியா, ஜூன் 15

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக வவுனியா வைத்தியசாலை முன்பாகக் கண்டன ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் சுமார் ஒரு மணித்தியாலம் முன்னெடுக்கப்பட்டது. பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியும் மருத்துவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நாட்டின் சுகாதார சேவைக்கு மிகப்பாதகமான முறையில் நடந்துகொள்கிறார் எனவும், அரச மருத்துவ அதிகாரிகள் மட்டத்தில் அதிகமான பிணக்குகளை ஏற்படுத்தியுள்ளார் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். (ஐ –100)

# கிளிநொச்சியில் ஆதன வரியை அறவிடும் நடவடிக்கை ஆரம்பம்




கிளிநொச்சி, ஜூன் 15

கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து ஆதன வரியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை கரைச்சி பிரதேசசபையினால் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த ஆதன வரியை பெற்றுக்கொள்வதற்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து, ஆதன வரியை அறவிடுவதற்கான ஆரம்ப நிகழ்வு கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் வட. மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, வை.தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வரி அறவீட்டிற்கான விண்ணப்பப் படிவங்கள் கையளிக்கப்பட்டன.

(ஐ)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகளும் பொறுப்பு

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 15

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களுக்குப் பாதுகாப்பு அதிகாரிகளும் பொறுப்பேற்கவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டுமல்ல யாராக இருந்தாலும் அமைச்சரவையைக் கூட்டாதது தவறுதான்.

ஆனால், அதற்காக உரிய நேரத்தில் கடமைகளைச் செய்திருக்கவேண்டிய அரச அதிகாரிகள் ஜனாதிபதி மீது மாத்திரம் பழி சுமத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனத்தில் தலையிடாவிட்டாலும் அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கும், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதிலும் மக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

அதற்காகப் புலனாய்வுதகவல்களை ஊடகங்களில் வெளிப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தீயை மூட்டிவிட்டு தற்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளால் அமைச்சரவை கூடாமல் இருப்பது மக்களையே பாதிக்கும்.

எனவே பிரதமரும், ஜனாதிபதியும் சுமுகமான கலந்துரையாடலின் மூலம் அமைச்சரவை தொடர்பான சர்ச்சைக்கு முடிவு காண வேண்டும் – என்றார்.(ஐ)

# மன்னாரில் கடும் வறட்சி

மன்னார், ஜூன் 15

மன்னார் மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாக அதிகரித்த வெப்பம் காணப்படுகின்றது.

இதனால் ஏற்பட்ட வறட்சி காரணமாக மன்னார், மடு, மாந்தை, முசலி, நானாட்டான், ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல குளங்கள் மற்றும் நீர்நிலைகளும் வற்றிய நிலையில் காணப்படுகின்றன.

இதனால், நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் பெரும்பாலான மீனவர்கள் வாழ்வாதாரம் இன்றி வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஐ)



# நாளை வடமராட்சி கிழக்கு ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இணைத்தலைவர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# பகிடிவதையால் 4 மாணவர் காயம்

மட்டக்களப்பு, ஜூன் 15

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாம், இரண்டாம் ஆண்டு மாணவர்கள் மீது மேற்கொண்ட பகிடிவதை காரணமாக, நால்வர் காயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம், நேற்று முன் தினம் இரவு நடைபெற்றதாக, ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நான்கு மாணவர்களும், முதலில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## காணாமலாக்கப்பட்டோர் குறித்து பாதுகாப்புச் சபையில் தீர்மானம்

யுத்தப் பிணக்குகள், ஆயுத மோதல்கள் போன்றவற்றுக்கு மத்தியில் காணாமற்போன – அல்லது வலிந்து காணமலாக்கப்பட்ட – ஆள்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்பு கவுன்ஸில் முதல் தடவையாக கடந்த செவ்வாயன்று ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

இந்தத் தீர்மானத்தின் பிரதான நோக்கம் –

★ யுத்தத்தில் இவ்வாறு ஆள்கள் வலிந்து காணாமலாக்கப்படுகின்றமையைத் தவிர்க்கச் செய்தல்.

★ பொறுப்புக் கூறலை நிலை நாட்டுதல்

★ ஆள்கள் காணாமல் போகின்றமை நிகழாமல் இயன்றவரை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தல்.

★ முன்னர் நடந்த காணாமலாக்கப்பட்ட சம்பவங்களை உரிய முறையில் கையாளுதல்.

★ அதன் மூலம் முன்னர் காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களைக் குடும்பத்தவர்களுடன் மீள இணைத்தல் அல்லது அவர்களுக்கு நேர்ந்த கதியைக் கண்டறிதல்.

★ இந்த விடயங்களில் நாடுகள் தங்கள் கடப்பாடுகளை நிறைவு செய்வதை ஊக்கப்படுத்துதல்.

– என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் இலங்கையை இலக்கு வைத்ததாகக் கொண்டு வரப்படாவிட்டாலும் கூட, அது இலங்கைக்குக் கனகச்சிதமாகப் பொருந்துவது மறுக்கற்பாலதல்ல.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் நிலைமைகளை மேம்படுத்துதல் தொடர்பாக 2015, 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே 30/01, 34/01 மற்றும் 40/01 தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இலங்கையும் சேர்ந்து இணை அனுசரணைப் பணி வழங்கி, இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமையால் சர்வதேசத் தளத்தில் இலங்கை வாக்குறுதி அளித்த கடப்பாடு இத் தீர்மானங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் கொடூர யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள், யுத்தக் குற்றங்கள் ஆகியன குறித்து நீதிமுறையான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, இழப்பீடுகளை வழங்கச் செய்து , இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தையும் அதன் அடிப்படையில் நீதி முறையான தீர்வையும் இலங்கையில் ஏற்படுத்துவதையே இந்தத் தீர்மானங்கள் மூன்றும் வலியுறுத்தி நிற்கின்றன.

இதில் உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டுதல் என்ற அடிப்படையில் இங்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

யுத்த காலத்தில் அரசுப் படைகளாலும், பிற ஆயுதக் குழுக்களாலும் கடத்தி, காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் பேரைத் தேடி அவர்களது இரத்த உறவுகள் இன்னமும் வீதிகளில் கிடந்து போராடிக் கொண்டிருக்கின்றன.

யுத்தம் முடிவடைந்து பத்து ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் இந்த விவகாரத்துக்கான தீர்வு – அல்லது முடிவு – சற்றேனும் முன் நகரவில்லை என்பதுதான் யதார்த்தப் புறநிலை.

ஐ.நாவின் மிக வலிமையான அமைப்பான பாதுகாப்புச் சபையில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை ஒட்டி முதல்தடவையாக ஏகமனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றமையும் –

காணமலாக்கப்பட்டோர் விடயத்தில் நாடுகள் தங்கள் கடப்பாட்டை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பை இந்தத் தீர்மானம் வலியுறுத்தி நிற்கின்றமையும்–

இலங்கையில் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அவலத்துடன் – ஆற்றொணாத் துன்பத்துடன் – அலைந்து கொண்டிருக்கும் அவர்களது உறவுகளுக்கு சிறிது நம்பிக்கைக் கீற்றைத் தரும் நடவடிக்கை என்று நம்பலாம்.

உலகம் முழுவதும் காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமான பல்லாயிரம் சம்பவங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறியும் முயற்சிக்கு இந்தத் தீர்மானம் பெரும் வலுப்படுத்தலை வழங்கியிருக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஐ.நா இயக்குநர் லூயிஸ் சர்பொன்னியூ கூறியிருக்கின்றமை சாலப் பொருத்தமான விடயமே.

இந்த விவகாரத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானத்துக்கு வருவதில் ஐ.நா. பாதுகாப்புச் சபை மிக மெதுவாக – தாமதமாகவே – செயற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், எனினும் இப்போதாவது இத்தகைய ஏகமனதான தீர்மானம் ஒன்றுக்கு அது வந்திருப்பது நம்பிக்கை தரும் விடயம் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தத் தீர்மானம் இவ்விடயத்தில் இதுவரை மெத்தனப் போக்கில், விட்டேத்தியாக செயற்படும் இலங்கையை இனியாவது சரியான தடத்துக்குத் திருப்புமானால் அது வரவேற்கத்தக்கதாகும்.

## வலி.வடக்கு தனியார் காணிகள் குறித்து நேரடியாக ஆராய்ந்தார் ஆளுநர் ராகவன்





யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் அழைப்பின் பேரில் வலி.வடக்குப் பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம் முற்பகல் விஜயம் மேற்கொண்ட வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், அந்தப் பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுடன் வலி. வடக்கில் பாதுகாப்புப் படைகளின் வசமுள்ள தனியார் காணிகள் தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது காங்கேசன்துறைப் பகுதியில் கடற்படையினர் வசமுள்ள நகுலேஸ்வரம் புனித பூமிக்குச் சொந்தமான 42 ஏக்கர் காணி உட்பட பாதுகாப்புப் படைகளின் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிப்பு தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேலும் இந்த விஜயத்தின் போது ஆளுநர் பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி ஆகியவற்றுக்கும் விஜயம் மேற்கொண்டு பாடசாலைகளின் தற்போதைய நிலைவரங்கள் குறித்து பாடசாலை அதிபர்களிடம் கேட்டறிந்துகொண்டதுடன் மாணவர்களுடன் சுமுகமாக கலந்துரையாடினார்.

இந்த விஜயத்தின்போது வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் முரளீதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஐ)

## பொலிஸ் பாதுகாப்புடன் வவுனியாவில் சிகிச்சைக்கு வந்த வெளிநாட்டு அகதிகள்




வவுனியா, ஜூன் 15

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளின் அகதிகள் பொலிஸ் பாதுகாப்புடன் வவுனியா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக நேற்று அழைத்து வரப்பட்டனர்.

உதிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக நீர்கொழும்பில் தங்கியிருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் அகதிகளில் ஒரு தொகுதியினர் இரண்டு கட்டமாக அழைத்து வரப்பட்டு வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தங்க வைக்கப்பட்டவர்களில் 10 பேர் வரையிலானோர் சிக்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டனர். சுமார் இரண்டுமணிநேரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மருந்துகளைப் பெற்ற பின் மீண்டும் அவர்கள் பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ-100)

## குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் மருத்துவரை நாடுக!

கொழும்பு, ஜூன் 15

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு காய்ச்சல் நிலை ஏற்பட்டால் தாமதியாது உடனடியாக அது தொடர்பாக மருத்துவரின் ஆலோசனையை பெற்றுக் கொள்வது மிக முக்கியமானது என தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

தென் மேற்கு பருவப்பெயர்ச்சி மழைக் காலநிலையை அடுத்து ஏழு மாவட்டங்களில் டெங்கு நுளம்பு அதிகரிக்கும் இடர் மாவட்டங்களாக தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்கள் தற்பொழுது டெங்கு இடர் அதிகம் உள்ள மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாகவே தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

காய்ச்சலினால் பாதிக்கப்பட்டால் உரிய மருத்துவரிடம் சிகிச்சை மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தேவையான அளவு குடிதண்ணீரை அருந்தவேண்டும் என்றும் தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

உரும்பிராய், ஜூன் 15

உரும்பிராய் ஞான வைரவர் சனசமூக நிலையத்தின் முழுநிலாநாள் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு, நிலையத் தலைவர் ம.ரகுநாதன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் வளவாளராக யாழ் “கை கொடுக்கும் நண்பர்கள்” அமைப்பின் ஸ்தாபகர் மாவை ரி.நித்தியானந்தன் கலந்து கொண்டு “சிறு கவலைகளும் ஆறாத மனத்துயரும். விடுபட வழி என்ன?” எனும் தலைப்பில் உரையாற்றுவார். உரையாடலின் நிறைவில் கலந்துரையாடலும் இடம்பெறும். (இ

### நாளை

16.06.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: அனுசம் மு.ப. 11.09 வரை
திதி: சதுர்த்தசி பி.ப. 2.56 வரை
இராகுகாலம் : 4.23 – 5.53
சுப நேரம் : 8.53 – 10.23

# பொறுப்புக்கூறலில் முன்னேறுமாறு இலங்கையை அமெ. வற்புறுத்தும்!

## உதவி இராஜாங்கச் செயலாளர் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 15

இலங்கையை நல்லிணக்கம்,நீதி, பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் முன்னேற்றத்தைக் காண்பிக்குமாறு அமெரிக்கா தொடர்ந்தும் வற்புறுத்தும் என தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் அலைஸ் ஜி வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் ஆசிய பசுபிக்கிற்கான வெளிவிவகார குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள எழுத்துமூல அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் இலங்கையுடன் அமெரிக்கா தோளோடு தோள் நிற்கின்றது என தெரிவித்துள்ள அவர், இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் திறனை வலுப்படுத்துவதற்கும் அமெரிக்கா உதவுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச பயங்கரவாதத்தை



எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து இலங்கைக்கு எவ்வாறு உதவலாம் என்பது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைச் சிறுபான்மையினத்தவர்கள், புகலிடக் கோரிக்கையாளர்கள், அகதிகள் உட்பட அனைவரினதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தேசிய தேர்தல்களுக்குள் நுழையும் இந்தத் தருணத்தில் இலங்கையை நல்லிணக்கம்,நீதி பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் முன்னேற்றத்தைக் காண்பிக்குமாறு அமெரிக்கா தொடர்ந்தும் வற்புறுத்தும் என அலைஸ் ஜி வெல்ஸ் குறிப்பிட்டார். (ஐ)

# உலக அமைதிச் சுட்டெண்; இலங்கைக்கு பின்னடைவு

கொழும்பு, ஜூன் 15

உலக அமைதி சுட்டெண் தரவரிசையில், இலங்கை பின்னடைவைச் சந்தித்துள்ளது.

அமெரிக்காவின் பொருளாதார மற்றும் அமைதி தொடர்பான நிறுவனம் வருடாந்தம் மேற்கொள்ளும் மதிப்பீட்டு தரவரிசைப் பட்டியலில், கடந்த ஆண்டில், 67 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, இந்த வருடம் 72 ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

உலகில் உள்ள 163 நாடுகளுக்கிடையில் இந்த மதிப்பீட்டுப்பணி மேற்கொள்ளப்படுகின்றது. தென்னாசிய நாடுகளில் அமைதியான நாடாக நேபாளம் முன்னணியில் உள்ளது. உலகத் தரவரிசையில் நேபாளம் 15 ஆவது இடத்தில் உள்ளது.

அத்துடன், உலகில் அமைதி நாடு என்ற வகையில், ஐஸ்லாந்து உலக நாடுகள் மத்தியில் முதலிடத்தை வகிக்கும் அதேவேளை, உலகில் அமைதியற்ற நாடாக ஆப்கானிஸ்தான் இடம் பிடித்துள்ளது. ஆப்கானிஸ்தான் 163 ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த வருடம் அமைதியற்ற நாடு என்ற வகையில் சிரியா 163 ஆவது இடத்தில் இருந்ததுடன், இந்த வருடம் ஓர் இடம் முன்னேறி 162 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. (ஐ)

# புதிய பொலிஸ் அத்தியட்சகர் வடக்கு ஆளுநரைச் சந்தித்தார்



யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். மாவட்ட புதிய பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது யாழ். மாவட்டத்திலும் வடக்கு மாகாணத்திலும் சட்டவிரோதமாகச் செயற்பட்டுவரும் சமூக விரோத குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் பொலிஸ் அத்தியட்சகரிடம் கேட்டுக்கொண்டதுடன் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார் என வடக்கு ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# தொலைத்தொடர்புக் கோபுரம் நிறுவும் பணி இடை நிறுத்தம்

## மக்களின் எதிர்ப்பை அடுத்து



வவுனியா, ஜூன் 15

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் மற்றும் மயானத்துக்கு அருகில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட தொலைத்தொடர்புக் கோபுரப் பணிகள் மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக நேற்று இடை நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா இறம்பைக்குளம் மயானத்துக்கு அருகில் புதன்கிழமை தனியார் நிறுவனம் ஒன்றினால் வீதிக்கு அருகில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதையறிந்த அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து குடியிருப்பு, பாடசாலை, ஆலயம், மயானத்திற்கு அருகில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன் கட்ட ஒப்பந்தப் பணியாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். பின்னர் நகரசபையின் கவனத்துக்குக் இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டு தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

நகரில் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான கோபுரங்களை அமைத்து எதிர்காலத்தில் அவற்றைத் தொலைத்தொடர்புக் கோபுரம் போன்று பாவிப்பதற்கு அந்த நிறுவனம் முயற்சித்துள்ளதாக மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்தத் திட்டத்துக்கு நகரசபையின் அனுமதி பெற விண்ணப்பம் தனியார் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 100)

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புள்ள ஐவர் டுபாயிலிருந்து அழைத்து வரப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 15

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய மொஹமட் மில்ஹான் உட்பட ஐந்து பேர் டுபாயில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஐவரும் நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியர்கள் ராஜிதவுக்கு எதிராக கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஜூன் 15

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் ஒன்று கூடி நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சுமார் 30 நிமிடங்கள் வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது. இதன்போது சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் குடியியல் உரிமை இல்லா தொழிக்கப்படவேண்டியது ஏன்? என்ற துண்டுப்பிரசுரமும் வீதியில் செல்பவர்களுக்கு வழங்கப்பட்டது. (ஐ)




# அரச ஊழியர் ஆடைச் சுற்றறிக்கைக்கு அமைச்சரவை அனுமதி பெறவில்லை!

## தெரிவுக்குழு முன்னிலையில் ஒப்புக்கொண்டார் ரத்னசிறி



கொழும்பு, ஜூன் 15

அரசஊழியர்கள் ஆடை தொடர்பான சுற்றறிக்கைக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெறவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி.

உயிர்த்த ஞாயிறன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதல்களின் பின்னர் வேலைத்தளங்களில் ஆடை அணிதல் தொடர்பான சர்ச்சை எழுந்தது. இதையடுத்து வேலைத்தளங்களில் அரச ஊழியர்கள் அணிய வேண்டிய ஆடைகள் குறித்து அண்மையில் சுற்றறிக்கையொன்றை இவர் வெளியிட்டிருந்தார்.

அமைச்சரவையின் அனுமதியைப் பெறாமல் இவர் இந்தச் சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தார் என்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று முன் தினம் சாட்சியமளிக்க வருமாறு இவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இவர் நேற்று முன்தினம் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

இதன்போது இவர் மேலும் தெரிவிக்கையில் –

அரச ஊழியர்களின் ஆடை தொடர்பான சுற்றறிக்கைக்கு அமைச்சரவையில் அனுமதி பெறப்படவில்லை. அது அனைத்துச் செயலாளர்கள் மட்டத்தில் பேசி முடிவெடுக்கப்பட்டது. பல தரப்பின் கரிசனைகள் உள்வாங்கப்பட்டே அந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அந்தச் சுற்றறிக்கையால் சர்ச்சைகள் ஏற்பட்டன என எவரும் என்னிடம் எழுத்து மூலம் முறையிடவில்லை – என்றார்.

# சீன,ரஷ்ய அதிபர்களுடன் மோடி கிர்கிஸ்தானில் விரிவான பேச்சு





பிஷ்கேக்,ஜுன்15

கிர்கிஸ்தான் நாட்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின்போது சீன அதிபர் ஜின்பிங்கையும் ரஷ்ய அதிபர் புடினையும் பிரதமர் மோடி தனித் தனியாகச் சந்தித்துப் பேசினார்.

கிர்கிஸ்தான் நாட்டின் தலைநகரான பிஷ்கேக் நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 2 நாள் மாநாடு நேற்றுடன் முடிவடைந்தது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி, டில்லியில் இருந்து தனி விமானத்தில் நேற்று முன்தினம் பிஷ்கேக் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மாநாட்டின் இடையே பிரதமர் நரேந்திர மோடி, மாநாட்டில் பங்கேற்பதற்காக அங்கு சென்றுள்ள சீன அதிபர் ஜின்பிங்கை சந்தித்து பேசினார்.

பேச்சின் தொடக்கத்தில் பிரதமர் மோடியின் தேர்தல் வெற்றிக்கு ஜின்பிங் பாராட்டு தெரிவித்தார். இன்று (15 ஆம் திகதி ஜின்பிங்கின் 66 ஆவது பிறந்தநாள். இதையொட்டி அவருக்கு இந்திய மக்கள் அனைவர் சார்பிலும் பிரதமர் மோடி வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்த சந்திப்பின்போது, இரு தரப்புக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வருகிற பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. எல்லையில் தொடர்ந்து அமைதியையும், சமாதானத்தையும் பராமரிக்க தீர்மானிக்கப்பட்டது. சீன வங்கியின் கிளையை இந்தியாவில் தொடங்குவது குறித்தும் பேசப்பட்டது.

மசூத் அசாரை சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்துத் தடை செய்ய சீனா ஆதரவு அளித்தது பற்றியும் இரு தலைவர்களும் பேசினர்.

பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதம் பற்றிய பிரச்சினையை பிரதமர் மோடி எழுப்பினார். பாகிஸ்தானுடன் இந்தியா சமாதான உறவையே விரும்புகிறது. பாகிஸ்தானுடனான உறவை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை என ஜின்பிங்கிடம் மோடி தெரிவித்தார்.

அத்துடன், பயங்கரவாதத்தை ஒடுக்கி பேச்சு வார்த்தை நடத்துவதற்கான சூழலை பாகிஸ்தான் உருவாக்க வேண்டும். ஆனால் தற்போது அது நடப்பதாக தெரியவில்லை. பேச்சு மீண்டும் தொடங்க வேண்டும் என்றால் பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஒடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜின்பிங்கிடம் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இந்தியாவில் நடைபெற இருக்கும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டுக்கு வருமாறு சீன அதிபர் ஜின்பிங்குக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். ஜின்பிங்கும் இந்த ஆண்டு இந்தியாவுக்குச் செல்லத் தயாராக இருப்பதை உறுதி செய்தார்.

சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயான வர்த்தக உறவில் சிக்கல் நீடித்து வருகிறது. இது தொடர்பாகவும் மோடியும், ஜின்பிங்கும் பேசினர்.

சீன அதிபர் ஜின்பிங்குடனான சந்திப்பு முடிந்த சிறிது நேரத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினையும் பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு இரு தரப்பு பிரதிநிதிகள் குழுக்களுடன் கூடியதாக அமைந்தது.

இரு நாட்டு உறவைப் புதிய உச்சத்துக்குக் கொண்டு செல்வது, இராணுவம், சிவில் அணு சக்தி உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் பல்வேறு அம்சங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

உத்தரபிரதேச மாநிலம் அமேதியில் துப்பாக்கி தொழிற்சாலை அமைப்பதற்கு ரஷ்யா உதவிக் கரம் நீட்ட முன்வந்து இருப்பதற்கு புடினுக்கு மோடி நன்றி தெரிவித்தார்.

ரஷ்யாவில் வரும் செப்டம்பர் மாதம் விளாடிவோஸ்டாக் நகரில் நடக்க உள்ள கிழக்கு பொருளாதார பேரவை மாநாட்டில் முக்கிய விருந்தினராகப் பிரதமர் மோடி கலந்து கொள்ள வேண்டும் என்று புடின் அழைப்பு விடுத்தார். அதை பிரதமர் மோடி ஏற்றுக்கொண்டார்.

# பாகிஸ்தான் பிரதமர் இம்ரானை புறமொதுக்கிய நரேந்திர மோடி



பிஷ்கேக்,ஜுன்15

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின்போது பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுடன் இந்தியப் பிரதமர் மோடி பரஸ்பரம் குசலம் கூட விசாரிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கிர்கிஸ்தானில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட 8 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இந்த மாநாட்டில் பல்வேறு நாட்டு தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்களுக்கு கிர்கிஸ்தான் அதிபர் நேற்று இரவு விருந்து வைத்தார். இந்த விருந்தின்போது, தலைவர்கள் பரஸ்பரம் நலம் விசாரித்துக்கொண்டு பேசிக்கொண்டு இருந்தனர். அப்போது இம்ரான் கானிடம் பிரதமர் மோடி பரஸ்பரம் நலம் விசாரிக்கவில்லை என ஏ.என்.ஐ செய்தி நிறுவன தகவல்கள் கூறுகின்றன.

முன்னதாக, ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுடன் கைகுலுக்குவதை தவிர்த்தார். மாநாட்டிற்கு வந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை சந்திக்காமல் பிரதமர் மோடி தவிர்த்தார். பிரதமர் மோடி அமர்ந்திருந்த இருக்கையிலிருந்து மூன்று இருக்கை தள்ளி இம்ரான் கான் அமர்ந்திருந்த போதும் அவரை சந்தித்துக் கை குலுக்கவில்லை.

மாநாட்டு மண்டபத்துக்குள் இருவரும் ஒரே சமயத்தில் பிரவேசித்த போதிலும் ஒருவரை ஒருவர் சட்டை செய்யவில்லை என்றும் கூறப்பட்டது

# கேரளாவில் மேலும் 47 பேருக்கு நிபா வைரஸ் தொற்று அறிகுறி!

## பரவுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை



திருவனந்தபுரம்,ஜுன்15

கேரளாவில் இரத்தப் பரிசோதனை முடிவுகள் வெளியானதில் மேலும் 47 பேருக்கு நிபா வைரஸ் அறிகுறி இருக்கின்றமை தெரிய வந்துள்ளது.

கேரளாவில் கடந்த ஆண்டு நிபா வைரஸ் காய்ச்சல் பரவியதில் தாதியர் உட்பட 17 பேர் பலியானார்கள். அதன் பிறகு நிபா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டும் கேரளாவில் நிபா வைரஸ் காய்ச்சல் மீண்டும் பரவியது. கொச்சியைச் சேர்ந்த ஒரு கல்லூரி மாணவர் நிபா வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பிறகே இதுபற்றி தெரிய வந்தது. தற்போது அந்த மாணவர் எர்ணாகுளத்தில் உள்ள அரசு ஆஸ்பத்திரி தனி வார்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அந்த மாணவருடன் நெருங்கி பழகியவர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள் என்று 330 பேரை மருத்துவ அதிகாரிகள் தங்களது கண்காணிப்பில் கொண்டு வந்தனர்.

அவர்களுக்கு நிபா வைரஸ் பரவி இருக்கிறதா என்பதைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி அவர்களது இரத்த மாதிரிகள் புனேயில் உள்ள ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இரத்தப் பரிசோதனை முடிவுகள் வெளியானதில் 47 பேருக்கு நிபா வைரஸ் அறிகுறி இருப்பது தெரியவந்தது. அதைத்தொடர்ந்து அவர்கள் 47 பேரும் உடனடியாக எர்ணாகுளம் அரசு ஆஸ்பத்திரியில் உள்ள தனி வார்டில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களை டாக்டர்கள் தொடர்ந்து கண்காணித்து சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

மேலும் மற்றவர்களுக்கும் நிபா வைரஸ் பாதிப்பு ஏற்படாமல் இருக்க அவர்களுக்கு டாக்டர்கள் தகுந்த அறிவுரைகள் வழங்கி உள்ளனர். அவர்களும் தொடர்ந்து டாக்டர்களின் கண்காணிப்பில் உள்ளனர். இதுபற்றி கொச்சி மாவட்ட கலெக்டர் முகமது சபீருல்லா கூறியதாவது: –

கொச்சி மாவட்டம் முழுவதும் நிபா வைரஸ் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. காய்ச்சல் அறிகுறி யாருக்கும் இருந்தால் உடனடியாக அருகில் உள்ள அரசு ஆஸ்பத்திரியை அணுகும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மருத்துவத்துறை அதிகாரிகள், சுகாதார துறை அதிகாரிகள் இணைந்து நிபா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தற்போது நிபா வைரஸ் கட்டுக்குள் உள்ளது.

– இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையில் நோயியல் வல்லுநர்கள் குழுவும் கேரளாவுக்கு வந்துள்ளது. இந்த குழுவில் உள்ளவர்கள் நோய் பாதிப்பு உள்ள பகுதிகளில் வசிக்கும் வெளவால்களைப் பிடித்து அவற்றின் இரத்தத்தைப் பரிசோதனை செய்து வருகிறார்கள். வெளவால், அணில் போன்றவை கடித்து போட்ட பழங்களையும் சேகரித்து நிபா வைரஸ் பரவுவது பற்றிக் கண்டறிந்து வருகிறார்கள்.

# தமிழக சட்டசபை கூடியதும் நல்லது நடக்கும் ஆட்சிக் கவிழ்ப்புக் குறித்து ஸ்டாலின் சூசகம்!

"இப்போது சொல்லமாட்டேன், சட்டசபை கூடியதும் நல்ல சம்பவம் நடக்கும்" – என்று பொள்ளாச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி பிறந்த நாள் மற்றும் வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் பொள்ளாச்சியில் நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்ற தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கூறியவை வருமாறு:–

தமிழகத்தில் 39 தொகுதிகளில் தேர்தல் நடந்திருக்கின்றது. அவற்றில், ஒரேயொரு தொகுதியைத் தவிர்த்து, 38 இடங்களில் நம்முடைய அணி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கின்றது.

22 தொகுதிகளில் சட்ட மன்றத்தின் இடைத் தேர்தல். அதில் 13 இடங்களில் வெற்றி பெற்றிருக்கின்றோம். ஆளும் கட்சியாக இருக்கக் கூடிய அ.தி.மு.க 9 இடங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது.

தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லையே, ஆட்சியை அவர்கள் தக்கவைத்துக் கொண்டார்கள், எனவே இது அ.தி.மு.க.விற்கு தானே வெற்றி என்று சொல்லுகின்றார்கள்.

விரைவில் நாம் தான் ஆட்சி பொறுப்பில் அமரப் போகின்றோம். அதில் எந்த சந்தேகமும் இருக்க வேண்டிய அவசியமில்லை. அதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை, ஆட்சிக்கு வர முடியவில்லையே என்று அதனை கேலி செய்து, தலையங்கங்கள் தீட்டி, ஊடகங்களில் அதனை விவாதப் பொருளாக்கி பேசிக் கொண்டிருக்கக்கூடிய இந்த செய்திகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அப்படி விமர்சனம் செய்து கொண்டிருக்கக் கூடிய, அவர்கள் எல்லோருக்கும் நான் சொல்லுகின்றேன். கவலைப்படாதீர்கள் உங்கள் கவலையையும் நாங்கள் விரைவில் தீர்த்து வைக்கப்போகின்றோம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. அது தான் இன்றைக்கு இருக்கக் கூடிய உண்மை.

சட்டமன்றத்தை உடன் கூட்டுமாறு நான் அறிக்கை விட்டிருக்கின்றேன். இதுநாள் வரையில் எந்த பதிலும் கிடையாது. இதற்கிடையில் அவர்கள் கட்சிக் கூட்டத்தை கூட்டி இருக்கின்றார்கள்.

அங்கு என்ன நடந்தது, அவர்கள் என்ன பேசினார்கள், என்பதை பற்றி நமக்கு கவலை இல்லை, அது நமக்கு தேவையுமில்லை, அவசியமும் கிடையாது. சட்டமன்றத்தை ஏன் கூட்டத் தயங்குகிறார்கள். சட்டமன்றத்தைக் கூட்டினால் என்ன ஆகுமோ என்று, கூட்டுவதற்குப் பயப்படுகின்றார்கள்.

தமிழக சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொடுத்திருக்கிறீர்களே, என்ன ஆகும் என்று கேட்டார்கள்? பொறுத்திருங்கள் என்று சொன்னேன்.

ஆனால், உங்களுக்கு நல்லது நடக்கக்கூடிய, இந்த நாட்டிற்கு நல்லது நடக்கக்கூடிய, நம் இனத்திற்கு நல்லது நடக்கக்கூடிய சம்பவம் நடக்கப் போகின்றது. அதில் எந்த மாற்றமும் கிடையாது. நீங்கள் விரும்புகின்ற வகையில் விரைவில் நடக்கப் போகின்றதா, இல்லையா என்று பாருங்கள். – என்றார் ஸ்டாலின்.

காலைக்கதிர் Kalaikathir



# இந்தியாவுக்கு மீள ஜி.எஸ்.பி. சலுகை வழங்குவது குறித்துப் பேச அமெ. தயார்



முன்னுரிமை வர்த்தக நாடு என்ற அந்தஸ்தை இந்தியாவுக்கு மீண்டும் வழங்குவது குறித்து அமெரிக்கா பேச்சு நடத்த தயார் என அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ கூறியுள்ளார்.

அமெரிக்கா- இந்தியா வர்த்தக கவுன்சிலில் நடத்திய இந்தியா தொடர்பான மாநாட்டில் மைக் பாம்பியோ பங்கேற்றுப் பேசினார். அப்போது, ஜி.எஸ்.பி. எனப்படும் பொது முன்னுரிமைத் திட்டத்தின் கீழ், இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு அளிக்கப்பட்டு வந்த வரி விலக்கு ரத்து செய்யப்பட்டது பற்றி அவர் குறிப்பிட்டார்.

இந்த முடிவு குறித்து விவாதிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறிய அவர், அமெரிக்கா பேச்சு நடத்துவதற்கு தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இதேபோல, இந்தியாவும் உள்நாட்டு சந்தைகளை சமமாகவும் நியாயமாகவும் அணுகுவதில் உள்ள தடைகளை அகற்ற முன்வரும் என நம்பிக்கை தெரிவித்தார்.

மைக் பாம்பியோ இந்தியா வரும் போது இதுகுறித்தும் 5ஜி வலையமைப்புத் தொழில்நுட்பம் குறித்தும், இந்தியாவில் உள்ள அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவிலேயே தகவல்களைப் பேணிப் பராமரிப்பது குறித்தும் விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சீனாவில் கனமழை 61 பேர் வரை சாவு!




சீனாவில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 61 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு மற்றும் வடக்கு சீனா பகுதிகளில் கடந்த ஒரு வாரகாலமாக சூறைக்காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. திரும்பும் திசையெங்கும் வெள்ளக்காடாக காட்சியளிப்பதால், ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தால் தொடர்புகளற்று தனித்து விடப்பட்டுள்ளனர். மேலும், சுமார் 37 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான விவசாய நிலங்கள் நீரில் மூழ்கிப் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி 61 பேர் உயிரிழந்தனர் எனவும், சுமார் மூன்றரை லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குவாங்டங் மாகாணத்தில், வெள்ளம் சூழ்ந்த வீடுகளில் சிக்கி தவித்த 4,300க்கு மேற்பட்டோரை மீட்பு குழுவினர் மீட்டுள்ளனர்.

# சிலி நாட்டில் நிலநடுக்கம்



கோகிம்போ,ஜூன்15

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 6.5 ஆக நிலநடுக்கம் பதிவானது. ஒருங்கிணைக்கப்பட்ட பன்னாட்டு நேரப்படி நள்ளிரவு 0.19 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோகிம்போ நகரில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால், அங்குள்ள கட்டடங்கள் குலுங்கின. இதனால் மக்கள் பதற்றம் அடைந்தனர். நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக எந்தத் தகவலும் இல்லை.

# ஓரினப் பால் திருமணத்துக்கு ஈக்குவடாரிலும் சட்ட அனுமதி

கியூடோ,ஜூன்15

ஈக்குவடாரிலும் ஓரினப் பால் திருமணத்துக்கு சட்ட அனுமதி கிட்டியிருக்கிறது.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்று ஈக்குவடார். கத்தோலிக்க கிறிஸ்தவர்களை அதிகம் கொண்ட இங்கு ஓரின சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொள்வது தண்டனைக்குரிய குற்றமாக இருந்து வந்தது.

இரு ஆண் ஓரின சேர்க்கை ஜோடிகள், தங்களின் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்கக்கோரி அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்தனர். இதுதொடர்பாக முடிவு எடுக்க 9 நீதிபதிகளைக் கொண்ட சிறப்பு அமர்வு அமைக்கப்பட்டது.



இந்த நிலையில் நேற்று முன்தினம் இந்தச் சிறப்பு அமர்வு ஓரினச் சேர்க்கை திருமணத்துக்கு ஒப்புதல் வழங்கி தீர்ப்பு அளித்தது. 9 நீதிபதிகளில் 5 பேர் ஓரின சேர்க்கையாளர்கள் திருமணத்துக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கி உள்ளனர்.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த தீர்ப்பு குறித்து, ஓரின சேர்க்கையாளர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி கூறும்போது, இந்த தீர்ப்பு மூலம் ஈக்குவடார் சமத்துவ நாடு என்பது நிரூபணமாகி இருக்கிறது என்றார்.

இந்த தீர்ப்பை ஓரின சேர்க்கை ஆதரவாளர்கள் வரவேற்று கொண்டாடி வருகிறார்கள்.

# விக்கிலீக்ஸ் நிறுவுநரை பிரிட்டன் அமெரிக்காவுக்கு நாடு கடத்தும்!



விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேவை நாடு கடத்த இங்கிலாந்து அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்க அரசின் இரகசியத் தகவல்களை வெளியிட்டமை, கணினி தரவுகளை 'ஹக்' செய்தமை உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே பிரிட்டனில் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரை நாடு கடத்தக் கோரி அமெரிக்கத் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டதாகவும், அதனை ஏற்று அது தொடர்பான உத்தரவில் கையெழுத்து இடப்பட்டுள்ளதாகவும் இங்கிலாந்து உள்துறை செயலர் சஜித் ஜாவித் தெரிவித்துள்ளார்.

(உ)

## ஓமன் வளைகுடாவில் பதற்ற நிலைமை

# 2 எண்ணெய்க் கப்பல்கள் மீது கண்ணிவெடித் தாக்குதல்கள்!

## 44 சிப்பந்திகளும் பத்திரமாக மீட்கப்பட்டனர்



அபுதாபி,ஜூன்15

ஓமன் வளைகுடாவில் நிறுத்தப்பட்டிருந்த இரு எண்ணெய்க் கப்பல்களின் மீது கண்ணி வெடித் தாக்குதல் நடத்தப்பட்டதில் அந்த கப்பல்களில் தீப்பிடித்தது. அதில் இருந்த 44 சிப்பந்திகளும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் ஓமன் வளைகுடா பகுதியில் அமைந்துள்ள புஜைரா துறைமுகம் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் முக்கிய பொருளாதார வழித்தடமாக திகழ்கிறது.

அரபு நாடுகளில் இருந்து மசகு எண்ணெய் ஏற்றிச் செல்லும் அனைத்து நாடுகளின் சரக்கு கப்பல்களும் இந்தத் துறைமுகத்தை கடந்துதான் செல்ல வேண்டும்.

ஈரான்-அமெரிக்கா இடையிலான மோதல் காரணமாக மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவுகிறது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி புஜைரா துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த சவுதி அரேபியாவின் 2 எண்ணெய் கப்பல்கள் உள்பட 4 வெளிநாட்டு கப்பல்கள் மீது நாசவேலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கடல் கண்ணி வெடிகள் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதன் பின்னணியில் ஈரான் இருப்பதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டியது.

சவுதி அரேபியாவும், சில மத்திய கிழக்கு நாடுகளும் ஈரான் மீது இதே குற்றச்சாட்டை முன்வைத்தன. ஆனால் ஈரான் இதனைத் திட்டவட்டமாக மறுத்தது.

இந்த நிலையில் புஜைரா துறைமுகத்தில் இருந்து 70 மைல் தொலைவில், பனாமா நாட்டு கொடியுடன் 'கோகுகா கரேஜியஸ்' என்ற எண்ணெய் கப்பலும், நோர்வே நாட்டுக்கு சொந்தமான 'அல்டைர்' என்ற எண்ணெய் கப்பலும் நிறுத்தப்பட்டிருந்தன.


நேற்று முன்தினம் காலை இந்த இரு கப்பல்களிலும் அடுத்தடுத்துப் பயங்கரக் குண்டு வெடிப்பு நேரிட்டது. இதில் 2 கப்பல்களிலும் தீப்பிடித்தன. அபாய ஒலி எழுப்பப்பட்டது.

அதனைக் கேட்டு அந்தப் பிராந்தியத்தில் இருந்த அமெரிக்க கடற்படை உடனடியாக உதவிக்குச் சென்றது. 'கோகுகா கரேஜியஸ்' கப்பலில் இருந்து 21 சிப்பந்திகளும், 'அல்டைர்' கப்பலில் இருந்து 23 சிப்பந்திகளும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

சரக்கு கப்பல்களை குறிவைத்து கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. எனினும் எந்த மாதிரியான தாக்குதல் நடத்தப்பட்டது என்பது பற்றி உறுதியான தகவல் வெளியாகவில்லை.

இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கப்பல்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் பதற்றத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

# துணிச்சலான பெண் பத்திரிகையாளர் மெக்ஸிக்கோவில் சுட்டுப் படுகொலை!



மெக்ஸிக்கோவில் பெண் பத்திரிகையாளர் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

மெக்ஸிக்கோவில் டாபாஸ்கோ மாகாணம் ஹுய்மாங்குயில்லோ நகரைச் சேர்ந்த இளம் பெண் நோர்மா சராபியா அந்த மாகாணத்தின் பிரபல பத்திரிகையில் நிருபராகப் பணியாற்றி வந்தார்.

ஹுய்மாங்குயில்லோ நகரில் நடைபெறும் கொலை, ஆள்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்ற சம்பவங்கள் குறித்தும், அதற்குக் காரணமானவர்கள் பற்றியும் பத்திரிகையில் அவர் துணிச்சலாக எழுதிவந்தார்.

இந்த நிலையில், புதனன்று நோர்மா சராபியா வீட்டுக்கு, மர்ம நபர்கள் இருவர் வந்து கதவைத் தட்டினர். நோர்மா சராபியா கதவை திறந்ததும் அந்த மர்ம நபர்கள் அவரை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுவிட்டு, மோட்டார் சைக்கிளில் தப்பினர்.

இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்த நோர்மா சராபியா சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்தார்.

அவரைக் கொலை செய்த நபர்கள் யார், கொலைக்கான காரணம் என்ன என்பவை குறித்துப் பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். உலகிலேயே மெக்ஸிக்கோவில்தான், பத்திரிகையாளர்கள் அதிக அளவில் கொல்லப்படுகிறார்கள்.

கடந்த 6 மாதங்களில் மட்டும் 6 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர், 2000 ஆம் ஆண்டு தொடங்கி தற்போது வரை அங்கு நூறுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir


துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 11 ஆவது நினைவு நாளையொட்டி முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் தங்க. முகுந்தன், அன்னையின் நினைவுகளை மீட்டு எழுதியுள்ள கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

# அனைவர் நெஞ்சங்களிலும் நிறைந்திருக்கும் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

## அம்மையாரைப் பிரிந்து தவிக்கும் துர்க்காபுர மகளிர் இல்ல சிறுமிகள்



**1977** ஆம் ஆண்டு கடைசிக் காலங்களில் நாம் தெல்லிப்பழை ஸ்ரீ காசி விநாயகர் ஆலயத்திற்குப் பக்கத்தில் குடிவந்த காலங்களில் காசிப்பிள்ளையாரிடமும் துர்க்காதேவியம்பாளிடமும் தினமும் சென்று வழிபட்டு வருவதுடன் ஆலயத் தொண்டுகளிலும் ஈடுபட்டுவந்தேன். துர்க்கையம்பாள் ஆலயத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமை மாலையிலும் அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை விசேட பூசைகளுக்காக பல தொண்டுகள் செய்துவந்தோம்.

அம்மையாரை நாம் எல்லாரும் ரீச்சர் என்றே பாசமாக அன்பு பாராட்டி அழைத்து வந்தோம். ஆலயத்தை மிகவும் உன்னத நிலைக்கு இன்று கொண்டுவந்த அவரது அயராத உழைப்பை – அன்னை அம்பிகையிடம் தன்னை அர்ப்பணித்த பாங்கை எடுத்துரைக்கச் சொல்லால் முடியாது.

இராஜகோபுரம் – சித்திரத்தேர் – தீர்த்தத்தடாகம் அன்னதான மடம் கல்யாண மண்டபம் மட்டுமல்ல அம்பிகையின் அழகிய திருவுருவச் சிலை வார்ப்பு, இன்று கணீரென ஒலித்துக் கொண்டிருக்கும் கண்டாமணி வார்ப்பு – சைவ சித்தாந்த திருமுறை மாநாடு – சண்டிமகாஹோமம் என்பவற்றைத் திறம்பட நடத்தி முடித்ததும் ஹரிதாஸ் கிரி சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரைத் தரிசிக்கும் பேறு எமக்குக் கிடைத்ததும் அன்னையுடைய அளப்பரிய அடக்கமான சேவை யினால் என்றால் மிகையாகாது.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் வீ. தர்மலிங்கம்; தனியாக ஆலயத்திற்கு வருகைதந்துவிட்டு வீடு செல்லும்போது(அவர் நிர்வாக சபையில் இருந்தாரா என்பதை நான் சரியாக தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் அடிக்கடி அவர் அங்கு வருவதைக் கண்டிருக்கின்றேன்) நான் அவரது வாகனத்தில் கோவிலிலிருந்து மில்க்வைற் அதிபர் சிவதர்மவள்ளல் மறைந்த க. கனகராசா அவர்களிடம் போவது வழக்கம். அவரும் அவரது துணைவியாரும் அடிக்கடி ஆலயத்திற்கு வந்துபோவதுண்டு.

எனது பெரிய தந்தையார் மறைந்த அ. அமிர்தலிங்கம் அவர்களும் குடும்பத்துடன் ஆலய வழிபாடு செய்யப் போகும்போது நானும் போவதுண்டு. ஆலயத்தில் வசந்தமண்டபத்திலும் தெற்குவாசலிலும் அடிக்கடி தேவாரம் பாடும்பணி எனக்குக் கிடைப்பதுண்டு. செவ்வாய்க்கிழமை மாலையில் வசந்த மண்டப பூசைகளின் பின்னர் தினமும் ரீச்சருடைய அருளுரை இடம்பெறும். அரனையும் அறத்தையும் வலியுறுத்தும் அப்பேச்சுக்கள் மன அழுக்குகளை நீக்கப் பெரிதும் உதவின. அதன்பின் சிலவேளைகளில் ரீச்சர் என்னைத் தேவாரம் பாடும்படி சொல்லிவிட்டு வேறு அவசிய தேவைகளுக்காக அலுவலகத்திற்குச் சென்றுவிடுவதுண்டு.

ஆலயத்தின் தேவைகளுக்காக கொழும்பிலிருக்கும் அடியார்களுடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள நாமிருந்த அலுவலகத்திற்கு வருகை தந்து நீண்ட நேரம் காத்திருந்து அனைவருடனும் தொலைபேசியில் பேசி தனது பணிகளைச் செம்மையாகச் செய்த பெருந்தகை அவர். ஏனெனில் அன் றைய நிலையில் தொலைபேசி ஆலயத்திற்கு அண்மையில் எமது காரியாலயத்தில் மாத்திரம் இருந்தது.

1985ல் எமது மூளாய் இந்து இளை ஞர் மன்றத் திறப்புவிழாவுக்கு ரீச்சர் வருகைதந்தது மட்டுமல்ல பலதடவைகள் எமது பிள்ளையார் கோவிலுக்கும் வந்து சொற்பொழிவாற்றி எமக்கு நல்லறிவும் தெளிவும் தந்தார்.


சுன்னாகம் திருமகள் அச்சகத்தைப் பொறுப்பெடுத்து பெரிய புராண வசனச் சுருக்கத்தை மறுபிரசுரம் செய்த பெருமை ரீச்சருக்குண்டு.

ஆலயத்தின் நகைகளும் பெறுமதிமிக்க பொருள்களும் கொள்ளையிடப் பட்டபோதும்;, வசந்த மண்டபத்திற்கு அருகிலுள்ள களஞ்சிய அறை படை யினரின் எறிகணைத் தாக்குதலுக்குள்ளாகி சேதமடைந்த பொழுதும், மனவுறுதியுடன் எல்லாம் அவளே பார்த்துக் கொள்வாள் என்று எமக்கு ஆறுதல் சொல்லித் தேற்றிய மனதிடத்தை நினைவிற்கொள்ளவேண்டும். களவு போன நகைகள் மீள வந்ததே அம்பாளின் அனுக்கிரகம் என்பதை விட ரீச்சரின் அருள்வாக்கு என்றால் மிகையாகாது. ஏனெனில் அம்பாள் வேறு ரீச்சர் வேறாக என்னால் கருத முடியவில்லை. காரணம் ஏற்கனவே சொன்னது போல தன்னை அறிந்தால் அது நீயாகிறாய் என்னும் தத்வமஸி என்ற உண்மை புலப்படும்.

நாட்டின் அனர்த்தங்களினால் நாம் இடம் பெயர்ந்து கொழும்பிலிருந்தபோது அங்கு வருகைதரும்போதும் நாம் அம்மையாரைச் சந்தித்து வந்ததுண்டு எஸ்.கே.பொன்னம்பலம் அவர்கள் வீட்டில்). ரீச்சருடைய பிறந்தநாள் ஒன்றுக்கு கொழும்பிலிருந்து கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம், அ. தங்கத்துரை, வீ. ஆனந்தசங்கரி, மாவை. சேனாதிராசா ஆகியோருடன் நானும் ஒரு வாழ்த்துக் கடிதம் கையொப்பமிட்டு அனுப்பியிருந்தோம். அதற்கு நன்றி தெரிவித்து ரீச்சர் பதிற் கடிதம் எழுதியிருந்தார். கடிதமோ, பணமோ எதுவரினும் அவர்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதும் வழக்கம் கொண்டிருந்தார்.

1997 இல் யாழ் மாநகர சபைத் தேர்தல் பணிகளுக்காக யாழ் வந்த சமயம் அம்மையாரைத் தரிசிக்க ஆலயத்துக்கு வந்தவேளையில் என்னை அந்தத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று கூறியதற்கு அமைய நான் தேர்தலில் போட்டியிடாது அவரது கட்டளைக்கு அடி பணிந்து நடந்து கொண்டேன். *(09 ஆம் பக்கம் பார்க்க...)*

# ஆனந்த சங்கரிக்கு அகவை 86



கிளிநொச்சித் தொகுதியைதனிமாவட்டமாக்கி, சகலமட்டத்திலும் தனித்துவம் பெற்று மிளிரச் செய்த,தமிழ் மக்களின் மூத்த அரசியல்வாதியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான வீரசிங்ககம் ஆனந்தசங்கரி அவர்களுக்கு இன்று (15.06.2019)அகவை எண்பத்தாறு (86).

இன்றுள்ளதுபோலசாதாரணமாக அவரது அரசியல்வாழ்க்கை ஆரம்பிக்கவில்லை. அன்றுமிகப் பெரியசவால்களுக்கு மத்தியிலேயே அவர் வெற்றிபெறவேண்டியிருந்தது. கிளிநொச்சித் தொகுதியிலேயே மிகவும் பின் தங்கிய பகுதியாக இருந்த பூநகரிப் பிரதேசத்திலேயே அவர் ஆசிரியராக கடமையாற்றினார்.

அங்குள்ள மாணவர்கள் கல்விகற்பதில் இருந்த இன்னல்களையும், பெற்றோர்கள் தமது பிள்ளைகளைபாடசாலைக்கு அனுப்புவதில் உள்ள சிரமங்களையும் நன்கு உணர்ந்திருந்தார். மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் வசதிவாய்ப்புகள் உள்ள மிகப் பிரபல்யம் பெற்றபள்ளிகளோடு போட்டி போட்டுத்தான் புள்ளிகளைப் பெறவேண்டும் என்ற நிலையும் இருந்துவந்தது. இதனை அடிப்படையாகவைத்துக்கொண்டுதான் அவர் கிளிநொச்சித் தொகுதியை தனி மாவட்டமாக மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

தனிமாவட்டக் கோரிக்கை எழுப்பப் பட்டவுடன்பலர் எள்ளிநகையாடினார்கள். கேட்டது தனிநாடு இப்போதுகேட்பது தனிமாவட்டமா? என்று கேள்வியும் எழுப்பினார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் எதிர்ப்பைக் காட்டினார்கள். கட்சிக்குள்ளும் எதிர்ப்பு. பிரதேசவாதம் என பலர் எரிந்துவிழுந்தார்கள். ஆனால் சரியான புள்ளி விவரங்களுடன் ஆதாரங்களை முன்வைத்து நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்து எல்லோரினதும் வாய்களையும் அடைத்து, கிளிநொச்சியை தனி மாவட்டமாக உருவாக்கினார்.

அதன் – விளைவாக பின் தங்கிய மாவட்டமான கிளிநொச்சியில் இருந்து அதிகளவான மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பட்டதாரிகள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள் என பலர் உருவாகிவிட்டார்கள்.அதுமட்டு மல்லாமல் மாவட்டச் செயலகம், மாவட்ட வைத்தியசாலை, மாவட்டக் காணி அலுவலகம் என கிளிநொச்சி தனி அந்தஸ்தை அடைந்துவிட்டது. இதற்கெல்லாம் வித்திட்டவர் ஆனந்தசங்கரி அவர்கள்தான் என்பதை யாராலும் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

சர்வசதேச நாடுகள் அன்றிருந்த மனோநிலையில், யுத்தம் ஒன்று உருவாகுமேயானால் அதன் இழப்பு அதிகம் என்பதை தீர்க்கதரிசனமாக உணர்ந்துகொண்ட ஆனந்தசங்கரி அவர்கள்விடுதலைப் புலிகளின் அமைப்பிற்கும், அரசாங்கத்திற்கும் அடிக்கடிஅறிவுரை கூறிகடிதங்களை எழுதி வந்தார். புலிகளுக்கு கூறிய அறிவுரைகளையும் ஆலோசனைகளையும்,பதவி மோகம் கொண்ட ஒருசிலசுயநலவாதிகளால் புலிகளுக்கு தவறான வியாக்கியானங்கள் கொடுத்து பெரிதுபடுத்தப்பட்டன.

அதன் விளைவால் அவர் புலிகளுக்கு எதிரியாக காட்டப்பட்டார். அதனால் உயிருக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது.

அதனை பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் தனது கருத்துக்களை வலியுறுத்தி வந்தார்.அவர் கூறியதுதான் இறுதியில் நடந்துமுடிந்தது.

வன்முறைக்கு எதிராக குரல் கொடுத்தமைக்காகவும், சகிப்புத்தன்மையுடன் போராடியதற்காகவும்2006ம் ஆண்டு, யுனெஸ்கோ அமைப்பால் மதன்ஜித் சிங் விருது வழங்கி சர்வதேசத்தால் கௌரவிக்கப்பட்டார்.சர்வதேசத்திற்கு தெரிந்த அவரின் நிலைப்பாடு தமிழ் மக்களுக்கு தெரியாமல் போனது ஒரு புதிராகவே இன்றும் உள்ளது.ஒரு சமூகத்திடம் பொய்களைக் கூறி வெற்றி பெறுவதை விட உண்மையைக் கூறிதோல்வியைத் தழுவிக் கொள்வதுமேலானதாகும் என்ற ஓர் அறிவாளியின் கூற்றுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

இலங்கையில் உள்ள அனைத்து இன,மதமக்களும் பேதமன்றிஒற்றுமையுடன் வாழ்வதையே அவர் விரும்புகின்றார். அதற்காகவே தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து செயற்படுகின்றார். அதனால்தான் அவர் எப்பொழுதும் சகல இன,மதமக்களும் ஒற்றுமையுடன் வாழ,காணி, பொலிஸ் அதிகாரமுடைய இந்திய முறையிலான ஒரு தீர்வுத் திட்டத்தைவிடுதலைப் புலிகளின் காலத்தில் இருந்தே,வலியுறுத்தி வருகின்றார்.

இனிவரும் காலங்களிலாவது அவருடைய சரியான கருத்துக்களை ஏற்றுக் கொண்டு செயற்படுவார்களேயானால் எமது மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியும்.

மக்களுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்து செயற்படும் வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள் இன்னும் பல்லாண்டு நீடூழி வாழ்ந்து தமிழ் மக்களுக்கு சேவை செய்ய, எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**இரா. சங்கையா,**
*(யாழ் மாநகரசபை முன்னாள் உறுப்பினர், நிர்வாகச் செயலாளர் த.வி.கூ.)*

# பதில் அமைச்சர்கள் விவகாரம்: ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு?

கொழும்பு, ஜூன் 15

பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்களின் இடங்களுக்கு பதில் அமைச்சர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தமை சட்டவிரோதமான செயற்பாடு எனத் தெரிவித்து, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்குச் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலர் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் ஒருவர் வெளிநாடு சென்றிருந்தால் அல்லது சுகவீனமுற்றிருந்தால் மட்டுமே பதில் அமைச்சர் நியமிக்கப்படலாம் என்றும், பதவியை அமைச்சர் ஒருவர் ராஜினாமா செய்திருந்தால் அந்த இடத்திற்குப் பதில் அமைச்சர் ஒருவரை நியமிக்க முடியாது என்றும் சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனடிப்படையிலேயே வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இதேவேளை, பதவி துறந்துள்ள முஸ்லிம் அமைச்சர்கள் மூவரது இடத்துக்கு அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மலிக் சமரவிக்கிரம, ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரை நியமிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரிய போதிலும் அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் இதனையடுத்தே பதில் அமைச்சர்கள் நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## பயங்கரவாதத்தை எதிர்கொள்ள இலங்கைக்கு ஜப்பான் உதவும்



கொழும்பு, ஜூன் 15

சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்கொள்ள இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகள், ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு ஜப்பான் தயாராகவுள்ளதாக அந்நாட்டு வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டோசிகோ அபே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஜப்பான் வெளிவிவகார இராஜாங்க அமைச்சருக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அலரி மாளிகையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பிலே ஜப்பான் வெளிநாட்டமைச்சர் இவ்வுறுதி மொழியை வழங்கினார். இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையில் பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடுவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஜப்பான் வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு இதன்போது பிரதமர், நன்றி தெரிவித்ததுடன், இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இந்திய பிரதமருடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்தும் ஜன்பான் வெளிநாட்ட மைச்சர் பிரதமருக்கு விளக்கினார்.

இலங்கையிலுள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் பல்வேறு துறைகளில் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கூட்டாக அபிவிருத்தியை முன்னெடுப்பது தொடர்பிலும் கருத்துகள் பரிமாறப்பட்டிருந்தன. இச்சந்திப்பில், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகிர சுகியாமா, தூதுரக அதிகாரிகள் மற்றும் ஜப்பான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஐ)

## கருக்கலைப்புக் குற்றச்சாட்டில் சாய்ந்தமருது மருத்துவர் கைது

கொழும்பு, ஜூன் 15

சட்டவிரோத கருக்கலைப்பு நடவடிக்கையை முன்னெடுக்கிறார் என்ற குற்றச்சாட்டில் சாய்ந்தமருதைச் சேர்ந்த முஸ்லிம் மருத்துவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலாவாக்கலையில் இயங்கிவரும் அவரது மருத்துவ சிகிச்சை நிலையத்தில் வைத்தே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது மருத்துவ நிலையத்தில் பணியாற்றிய தாதியப் பணியாளர் ஒருவர் தலவாக்கலை – லிந்துலை நகர சபையின் தலைவருக்கு அறிவித்துள்ளார். அதுதொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து மருத்துவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

அதன்போது அவரது எம்.பி.பி எஸ். மருத்துவத் தகைமையை உறுதிப்படுத்த அவர் தவறியதால் மேலதிக விசாரணைக்கு கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் சந்தேக நபரால்கடந்த ஒரு வருடமாக நடத்தப்பட்டு வந்த மருத்துவ சிசிச்சை நிலையத்திலிருந்து சந்தேகத்துக்கு இடமான மருந்துகள் மற்றும் ஊசிகள் என்பன மீட்கப்பபட்டுள்ளன.

சந்தேகநபரான மருத்துவர் விசாரணைகளின் பின்னர் நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் நாளைமறுதினம் முற்படுத்தப் படுவார் என்று தலாவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மருத்துவர் ஷாபி கருத்தடைச் சிகிச்சை செய்தார் என்று நாங்கள் அறியவில்லை

### அது மிக இரகசியமாகச் செய்யக்கூடிய செயலுமில்லை என 69 தாதியர்கள் வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 15

குருநாகல் போதனா மருத்துவமனையின் மருத்துவர் ஷாபி சிகாப்தீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள கருத்தடைக் குற்றச்சாட்டுத் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று அந்த மருத்துவமனையில் பணியாற்றும் 69 தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பெண்களுக்கு சத்திரசிகிச்சை ஊடான கருத்தடை இரகசியமாகச் செய்யக்கூடிய ஒன்றல்ல என்றும் அவர்கள், குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்திலும், அளவுக்கதிகமான சொத்துக்களைச் சேகரித்துள்ளார் என்ற சந்தேகத்திலும், குருநாகல் போதனா மருத்துவமனையின் மருத்துவர் ஷாபி சிகாப்தீன் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் தற்போது. குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

இவர், 8000இற்கும் அதிகமான சிங்களப் பெண்களுக்கு கருத்தடை செய்திருக்கிறார் எனக் குற்றச்சாட்டை முன்வைத்து சிங்கள நாளிதழ் செய்திவெளியிட்டது.

இந்தநிலையில், மருத்துவர் ஷாபி சிகாப்தீனுக்கு எதிராக இதுவரை சுமார் ஆயிரம் பெண்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

மருத்துவரால் மகப்பேற்றின்போது, சிசேரியன் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட பின்னர், தமக்கு இரண்டாவது குழந்தை பிறக்கவில்லை என்று அவர்களில் பலர் கூறியுள்ளனர்.

இதனால், மருத்துவர் ஷாபி சிகாப்தீன் மகப்பேற்று அறுவைச் சிகிச்சையின் போது, பெண்களின் கருவுறும் தன்மையை இழக்கச் செய்தாரா என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த நிலையில் குற்ற விசாரணைப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சுகாதார அமைச்சும் சிறப்பு விசாரணைக் குழுவொன்றை அமைத்து விசாரித்து வருகிறது.

குருணாகல் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் 70 தாதிய உத்தியோகத்தர்கள் மருத்துவர் ஷாபி சிகாப்தீனுடன் பணியாற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களில் 69 பேரிடம் குற்ற விசாரணைப் பிரிவினரால் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. ஒரே ஒரு தாதிய உத்தியோகத்தரிடம் மட்டும் வாக்குமூலம் பெறப்படவில்லை. அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அனைவர் நெஞ்சங்களிலும்....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதன் பின் முதல்வர் சரோஜினி யோகேஸ்வர னின் அகால மரணத்தின் பின்னர் மாநகர சபையை நடத்த எவருமில்லாத போது நாம் மறைந்த முதல்வர் சிவபாலன் மற்றும் இரவிராஜ் அவர்களுடன் சேர்ந்து போய் சந்தித்தபோது நான் உறுப்பினராக வரவிருப்பதை அவருக்கும் தெரிவித்து அவரது ஒப்புதலுடன் மாநகர சபை உறுப்பினரானேன்.

எனது திருமணத்தை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடத்த தீர்மானித்த போது அன்றைய நாளில் வேறொரு திருமணம் நடக்க இருந்தபடியால் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடத்த ஒழுங்குசெய்து தந்ததுடன் எனது திருமணநாளன்று முழு நேரமும் நல்லூரில் வந்து நின்று எம்மை ஆசீர்வாதம் செய்து வாழ்த்தியதை எப்படி என் வாழ்நாளில் மறக்கமுடியும். எமது கட்சித் தலைவர்கள் வீ. ஆனந்தசங்கரி, இரா. சம்பந்தன்;, ந. இரவிராஜ் ஆகியோருடனும் துர்க்காபுரம்போய் அம்மையாரைச் சந் தித்ததையும் இவ்விடத்தில் நினைவு படுத்துவது நல்லது. மறைந்த நாடாளு மன்ற உறுப்பினரும் தெல்லிப்பழை ப.நோ. கூ. சுங்கத் தலைவருமான சிவ மகாராசா அவர்களும் ஆலயத்துடனும் ரீச்சருடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தமை யாவரும் அறிந்ததே.

தழிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மறைந்த தந்தை செல்வா, ஜீ. ஜீ பொன்னம்பலம் ஆகியோர் மீதும் பெரும்மதிப்ப வைத்திருந்த ரீச்சர் அவர்கள் மறைந்த குமார் பொன்னம்பலம் அவர்களது நினைவாக வெளியிடப்பட்ட நினைவு நூலிலும், எனது பெரிய தந்தையார் மறைந்த அ. அமிர்தலிங்கம் அவர்களுடைய நினைவு மலரிலும் தனது செய்தியை தெரிவித்திருப்பதையும் நான் குறிப்பிட வேண்டும்.

நமது நாட்டில் மாத்திரமல்ல பல வெளிநாடுகளுக்கும் சென்று தமிழ்ப் பணியும் சமயப்பணியும் புரிந்த பெரு மைக்குரியவர். அனைவருடனும் எளிமையாகவும், புன்முறுவல் பூத்தமுகமுடையவராய் அன்பொழுகப் பேசி அனைவரது நெஞ்சங்களிலும் என்றும் நீங்காமல் உறைகின்ற பெருமையுடையவர். செல்லும் அனைவருக்கும் போதும் போதும் என வயிறாரச் சோறு போட்ட பெருமையுமுடையவர்.

அன்னாரைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். அவ்வளவுக்கு எம்முடன் பாசத்தில் பிணைந்திருந்தார். அவரது பணிகளைப்பற்றி பலரும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தான் எங்கே வேறு இடங்களுக்குச் சென்றால் தனது பராமரிப்பில் இருக்கும் பிள்ளைகளை தவிக்க விட்டுவிடுவோமோ என்ற ஆதங்கமும் பொறுப்பும் கொண்டிருந்த ரீச்சர் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் நல்லூர் மணிமண்டபத்திற்குச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

வெளி நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் தவிர்த்துக்கொண்டு தனது கடமையைச் செவ்வனே செய்தார். செஞ்சொற்செல்வர் சிவத்திரு. ஆறு.திருமுருகன் அவர்க ளைத் தமக்குப்பின் – தனது பொறுப்பை ஒப்படைத்தார் என்று நான் கூறுவதில் பெருமையடைகின்றேன். ஏனெனில் இதுகூட ஒரு குருபரம்பரையையொத்த பணியென நான் கருதுகின்றேன். முற்றிலும் மாறுபட்ட – வாழ்வே கேள்விக்குறியாக இருக்கும் எம் இனத்தின் கண்ணெனத் திகழ்ந்தவர் ரீச்சர் அவர்கள். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் ஆலய வழிபாட்டில் தமிழ்ப் பண்பாட்டையும், வாழ்வில் எளிமையையும் கடைப்பிடிக்க அவர் கூறும் அறிவுரைகள் – ஏனைய ஆலயங்களுக்கு ஒரு முன்மாதிரி.

எமக்கெல்லாம் உறுதுணையாக வழிகாட்டியாக இருந்த அம்மையாரைப் பிரிந்து இன்று தவிக்கும் துர்க்காபுர தொண்டர் அணியினருக்கும், ஆலய நிர்வாகசபையினருக்கும், தாயாயிருந்து வழிநடத்திய இந்து இளைஞர் சங்கத்தினருக்கும் மற்றும் அம்பிகை அடியார்களுக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ துர்க்காதேவியம்பிகை மனதைரியத்தையும், சாந்தியையும் வழங்க மனதாரப் பிரார்த்தித்து ரீச்சரின் ஜீவாத்மா அன்னை துர்க்காதேவியின் பாதார விந்தங்களில் நித்தியப் பேரின்பத்தில் ஐக்கியப்பட்டுச் சரணடையப் பிரார்த் தித்து எனது இக் கண்ணீர்க் காணிக்கையைச் சமர்ப்பி கின்றேன்.

என்றும் ரீச்சரின் மறவாத நினைவுகளுடன் கலங்கி நிற்கும்

**தங்க. முகுந்தன்.**

# மழையால் ரத்தாகும் போட்டிகள் வேறு நாள்களில் நடத்தப்படுமா?

உலகக்கிண்ணக் கிரிக்கெட்டில் மழையால் பாதிக்கும் ஆட்டங்களுக்கும் மாற்று நாள் ஒதுக்குவது முடியாத காரியம் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இங்கிலாந்தில் நடந்து வரும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் மழையால் பாதிக்கப்பட்டு வருகின்றன. இலங்கை-பாகிஸ்தான், இலங்கை-பங்களாதேஷ் அணிகள் இடையிலான ஆட்டம் ஒரு பந்து கூட வீசப்படாமல் மழையால் ரத்தானது.

தென்னாபிரிக்கா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையிலான ஆட்டம் 7.3 ஓவர்களில் மழையால் ரத்துச் செய்யப்பட்டது. மழை காரணமாக அதிக ஆட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டு இருப்பது நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் தான்.

மழையால் ரத்து செய்யப்படும் லீக் ஆட்டங்களுக்கு மாற்று நாள் எதுவும் கிடையாது. அரைஇறுதி மற்றும் இறுதிப்போட்டிக்கு மட்டும் மாற்று நாள் உண்டு.

லீக் சுற்று ஆட்டங்களுக்கும் மாற்று நாள் அளிக்க வேண்டும் என்று பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளர் ஸ்டீவ் ரோட்ஸ் உள்பட பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் உலக கோப்பை போட்டியில் லீக் ஆட்டங்களுக்கு மாற்று நாள் ஒதுக்குவது என்பது இயலாத காரியம் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது. மாற்றுநாள் என்றால் போட்டியின் கால அளவு கணிசமாக அதிகரித்துவிடும்.

இதனை நடைமுறைபடுத்துவது என்பது மிகவும் சிக்கலானதாகும். கூடுதல் ஆட்கள் தேவைப்படும். மாற்றுநாளில் மழைபெய்யாது என்பதற்கு உத்தரவாதம் எதுவும் கிடையாது என ஐசிசி தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தான் அரையிறுதிக்கு முன்னேறுவதில் சிக்கல்நிலை



கிரிக்கெட் உலகில் அதிர்ச்சி கொடுக்கும் அணி என வர்ணிக்கப்படும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் அரையிறுதிக்கு முன்னேறுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

நடைபெற்று வரும் உலகக்கிண்ண தொடரில் பாகிஸ்தான் இதுவரை நான்கு போட்டிகளில் விளையாடியுள்ளது. இதில் ஒரு வெற்றி, இரண்டு தோல்வி, ஒரு சமநிலை மூலம், புள்ளிபட்டியலில் மூன்று புள்ளிகளுடன் எட்டாவது இடத்தில் உள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் இந்திய அணிக்கெதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி, கட்டாய வெற்றியைப் பெற வேண்டியுள்ளது.

இதில் ஒருவேளை பாகிஸ்தான் தோற்றுவிட்டால், அந்த அணி அரையிறுதிக்கு முன்னேறுவதில் சிக்கல் ஏற்பட்டு விடும்.ஏற்கனவே இந்தியாவுக்கு எதிரான போட்டி என்றாலே மிகப்பெரிய நெருக்கடி இருக்கும். பாகிஸ்தானின் பரம எதிரி நாடான இந்தியாவை, பாகிஸ்தான் அணி உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் வீழ்த்தியதே கிடையாது.

கடந்த 1992ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நடைபெற்ற 6 உலகக் கிண்ணப் தொடர்களில், பாகிஸ்தான் அணி, இந்தியாவை தோற்கடித்ததில்லை.

எனவே, வரலாற்று வெற்றிக்காக காத்திருக்கும் பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் இமாம் உல் ஹக் இதுகுறித்து கூறுகையில்–

ஆஸ்திரேலியா அணிக்கெதிரான போட்டியில் தோல்வியடைந்துள்ளதால், மிகவும் நெருக்கடிக்குள்ளான போட்டியாக கருதப்படும் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் நாங்கள் வெற்றி பெற்றே ஆக வேண்டும்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி மிகவும் நெருக்கடிக்குள்ளான போட்டி. இந்தப் போட்டிக்கு பின்னால் ஏராளமான மர்மங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் நாங்கள் எங்களுடைய கிரிக்கெட் பலத்துடன், எப்படி சிறப்பாக விளையாட முடியும் என்பதில்தான் கவனம் செலுத்துவோம் என கூறினார்.

இதேவேளை ஆஸ்திரேலியா அணியுடன் செய்த தவறை, இந்தியா அணியுடன் செய்ய மாட்டோம் என பாகிஸ்தான் அணியின் தலைவர் சப்ராஸ் அஹமட் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, நாளை, மென்செஸ்டர்- எமிரேட்ஸ் ஓல்ட் ட்ரப்போர்ட் மைதானத்தில் இந்தியா அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண போட்டி, நடைபெறுவதற்கு முன்னரே இப்போட்டி நடைபெறக் கூடாது என இந்தியா தரப்பில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த எதிர்ப்புக்களையும் தாண்டி தற்போது இப்போட்டி நடைபெறவுள்ளது.

இந்தியாவின் புல்வாமாவில் கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள், இந்தியா இராணுவ வாகனங்கள் மீது நடத்திய குண்டுத் தாக்குதலில், 40இற்கும் இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இதனால், பாகிஸ்தான் அணியுடனான கிரிக்கெட் போட்டியை கைவிட வேண்டுமென இந்தியா தரப்பில் பலரும் வலியுறுத்தினர்.

தற்போது தடை கடந்து நடத்தப்படும் இப்போட்டி, இரு நாடுகளுக்கிடையிலான ஒரு போரின் அங்கமாக நடைபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. (ஐ)

# இந்தியா - நியூசிலாந்து ஆட்டமும் மழையினால் கைவிடப்பட்டது!

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான உலகக் கிண்ண லீக் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் 12வது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் நாட்டிங்காமில் நடக்கவிருந்த 18ஆவது லீக் போட்டியில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதவிருந்தன.

இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணி அளவில் மழை பொழிய ஆரம்பித்தமையினால் நாணயச் சுழற்சி கூட போடாத நிலையில் போட்டி கைவிடப்பட்டது.



இந்தப் போட்டி கைவிடப்பட்டதால் நியூசிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கு தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. தொடரில் விளையாடிய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றுப் புள்ளிப் பட்டியலில் முதலிடத்திலிருந்த நியூசிலாந்து அணி நேற்றுமுன்தினம் ஒரு புள்ளியுடன் மொத்தம் 7 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

தொடரில் விளையாடிய 2 போட்டிகளிலும் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் 4ஆம் இடத்திலிருந்த இந்திய அணி அன்றைய ஒரு புள்ளியுடன் மொத்தம் 5 புள்ளிகளுடன் மூன்றாமிடத்துக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியும் மழை காரணமாக கைவிடப்பட்டதால், ரவுண்ட் ரோபின் சுற்றில் இதுவரையான 18 லீக் போட்டிகளில் 4 போட்டிகள் மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதிக்குள் நுழைந்தது ஊரெழு றோயல் அணி!



யாழ் லீக் அனுமதியுடன் பாடும்மீன் கழக அனுசரணையுடன் குருநகர் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் நினைவாக நடத்தும் தூயஒளி கிண்ண சுற்றுப்போட்டியில் மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது.

றோயல் அணி சார்பாக பிரசன்னா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.

# ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான விளையாட்டு விழா

## பிரதம அதிதியாக பங்குபற்றுகிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 15

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக், வடமராட்சி கிழக்கு உதைப்பந்தாட்ட உப லீக் ஆகியவற்றின் அனுமதியுடன் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் 'வடக்கு மாகாண ரீதியிலான விளையாட்டு விழா - 2019' நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆழியவளைஅருணோதயாவிளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத்தின் தலைவர் சே.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார், மருதங்கேணி பிரதேசசெயலர் க.கனகேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் வே.பிரசாந்தன், ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் அதிபர் க.பாஸ்கரன், இலங்கை உதைபந்தாட்ட பிரதி செயலாளர் அ.அருளானந்தசோதி, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் மா.நவநீதமணி, யாழ்.மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர் பா.முகுந்தன், வடமராட்சி கிழக்கு உதைபந்தாட்ட உப லீக் பொருளாளர் வே.சசிகாந் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தநிகழ்வில் வடக்குமாகாண ரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி இடம்பெறும். புதுக்குடியிருப்பு சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகமும் இறுதிப்போட்டியில் மோதவுள்ளன. (ஐ)

## இன்றைய ஆட்டங்கள்

ICC CRICKET WORLD CUP ENGLAND & WALES 2019

இலங்கை VS ஆஸ்திரேலியா
(பிற்பகல் 3 மணி)

தென்னாபிரிக்கா VS ஆப்கானிஸ்தான்
(மாலை 6 மணி)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிஸ்கெக் நகரில் நடந்த, ங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தின் ஆபத்தைத் தடுக்க, அனைத்து மனித நேய சக்திகளும் ஒன்றாக முன்வரவேண்டும். பயங்கரவாதிகளுக்கு ஆதரவு, நிதி, ஊக்கம் அளிக்கும் நாட்டைத் தனிமைப் படுத்த வேண்டும். இந்தப் போரில், அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பை அதிகப்படுத்தி, இந்தப் பிராந்தியத்தில், பயங்கரவாதத்தை அகற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் மோடி கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நிரந்தர உறுப்பினராக இந்தியா இணைந்துள்ளது. இதன் செயல்பாட்டில், இந்தியா தனது பங்களிப்பை உறுதி செய்துள்ளது.

கல்வியும், கலாசாரமும், நமது சமூகத்துக்கு ஒரு நேர்மறையான செயற்பாடுகளை கொடுத்தன. இளைஞர்கள் இடையே, பிரிவினையைப் பரப்புவதை நிறுத்தவேண்டும். இலங்கை சென்ற போது, புனித அந்தோனியார் தேவாலயத்தில் பல அப்பாவிகளின் உயிர்களைப் பறித்த பயங்கரவாதத்தின் கோர முகத்தைப் பார்த்தேன்.

பயங்கரவாதத்தின் ஆபத்தைத் தடுக்க அனைத்து மனித நேய சக்திகளும் ஒன்றாக முன்வரவேண்டும். பயங்கரவாதிகளுக்கு ஆதரவு , நிதி, ஊக்கம் அளிக்கும் நாட்டைத் தனிமைப் படுத்தவேண்டும். இந்தப் போரில், அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பை அதிகப்படுத்தவேண்டும். இந்தப் பிராந்தியத்தில், பயங்கரவாதத்தை அகற்றுவதை உறுதி செய்ய வேண்டும்– என்றார். (ஐ)

## ஆடைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணி செய்யும் இந்த தொழிற்சாலையின் களஞ்சிய அறையில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்து, தொழிற்சாலைக் கட்டம், அலுவலகம், தையல் இயந்திரப் பகுதி உட்பட முழுவதும் பரவியுள்ளது. இதனால் சொத்துக்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

தீ விபத்து ஏற்பட்டு 3 மணித்தியாலங்கள் வரை கடந்தும் தீயணைப்பு வீரர்கள் அவ்விடத்துக்கு வருகைத் தராமையினால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். பின்னர் நீர்கொழும்பு மற்றும் குருநாகல் தீயணைப்புக் குழுவினர் பிரதேச மக்களுடன் இணைந்து தீப் பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளனர். தீப்பரவலுக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. (ஐ)

## ஓ.எல்., புலமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை என்பவற்றின் தேசிய மட்ட தரப்படுத்தல் (Island Best Rank) இனிவரும் காலங்களில் வெளியிடப்படமாட்டாது.

அதனூடாக மாணவர்களுக்கு ஏற்படும் மனத்தாக்கத்தைக் குறைக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டது கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, க.பொ.த. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாவட்ட நிலைத் தரப்படுத்தல்கள் வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள், நேற்று மாலை 4 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

முன்னதாக, சிங்கப்பூருக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் அங்கு சிங்கப்பூர் சட்டத்துறை அமைச்சர் சண்முகம், வெளிநாட்டமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ஐ)

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களுடன் இவர்களுக்கும் நேரடித் தொடர்பு இருக்கும். ஏனெனில், குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிப்பதற்கான கடைசி வழியாக சஹ்ரான் குழுவினரை இவர்கள் பயன்படுத்தியிருப்பார்கள். அதேவேளை, உண்மைகள் வெளியில் வந்து இவர்கள் சிக்கிவிடக்கூடாது என்பதற்காகவே தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைக் கலைக்குமாறு அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொதித்தெழுந்தார்.

–இவ்வாறு தெரிவித்தார் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன.

அவர் மேலும் கூறுகையில்–

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசீமுக்கும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் இருந்த நேரடித் தொடர்பை நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் போட்டுடைத்துள்ளார் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி.கோட்டாபயவின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கிய புலனாய்வுத்துறையினரும் சஹ்ரானுடன் நெருக்கமாக இருந்துள்ளனர்.

ராஜபக்ஷ ஆட்சியில் இந்த உண்மைகளை வெளியில் அம்பலப்படுத்தக்கூடாது என்பதற்காகக் கோடிக்கணக்கான பணம் பேரம் பேசப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியும்.

மஹிந்தவும் கோட்டாபயவும் தான் சஹ்ரான் குழுவினருக்குத் தீனி போட்டு வளர்த்துள்ளனர். எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் மஹிந்த, கோட்டாபய ஆகியோருக்கும் நேரடித் தொடர்பு இருக்கும். ஏனெனில், குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிப்பதற்கான கடைசி வழியாக சஹ்ரான் குழுவினரை இவர்கள் பயன்படுத்தியிருப்பார்கள்.

அதுதான் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொது எதிரணியினர் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் தெரிவுக்குழுவைப் பகிஷ்கரித்துள்ளனர்.

உண்மைகள் வெளியில் வந்து இவர்கள் சிக்கிவிடக்கூடாது என்பதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தெரிவுக் குழுவைக் கலைக்குமாறு அமைச்சரவைக் கூட்டத்தில் கொதித்தெழுந்தார்.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தானும் இந்தத் தாக்குதல் சம்பவங்களுடன் சிக்குவேன் என்ற மனப்பயத்தில் ஜனாதிபதி இருக்கின்றார்.

சட்டம், ஒழுங்கு அமைச்சையும் பாதுகாப்பு அமைச்சையும் வலுக்கட்டாயமாக தன் வசம் வைத்திருக்கும் ஜனாதிபதி இந்தத் தாக்குதல்களுக்கான பொறுப்பை ஏதோவொரு வழியில் ஏற்றே ஆக வேண்டும் – என்றார்.(ஐ)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்களே அகற்றுவோம் எனவும் தெரிவித்தார்.

இந்து பௌத்த கலாசார பேரவையில் 2ஆம் மொழிக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

யாழ்ப்பாணத்தில் தமிழ் மாணவர்களுக்குச் சிங்களம் கற்பிக்கப்படுகின்றது. அதேபோல் கொழும்பில் சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கப்பட வேண்டும். அதற்கான பொறுப்பு இந்தப் பேரவைக்கு உள்ளது. மேலும் இந்து சமயத்துக்கும் பௌத்த சமயத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இங்கே இந்து ஆலயங்களில் புத்தர் சிலைகள் வைக்கப்படுவதற் கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது. உண்மையில் அதனை மக்கள் விரும்பாவிட்டால் நாங்கள் செய்யமாட்டோம். அதற்காக நீதிமன்றம் செல்லத் தேவையில்லை, பொலிஸ் நிலையம் செல்லத் தேவையில்லை. இந்து, பௌத்த சமயங்களின் செய்தி அன்பு மட்டுமே யாகும். தலதா மாளிகை தாக்கப்பட்டபோது இந்துக் கோவில்களைப் பௌத்தர்கள் தாக்கவில்லை. 83 கலவரம் நடைபெற்ற காலத்திலும் கூட இந்து கோவில்களைத் தாக்கவில்லை. தாக்க வேண்டும் என நாங்கள் நினைக்கவுமில்லை.

ஆனால் சவுதி, ஓமான், கட்டார் போன்ற நாடுகளில் பிள்ளையார் கோவிலைக் கட்ட முடியுமா? இலங்கையில் சகல மதங்களுக்கும் பூரணமான சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது. உயிர்த்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்கள், விடுதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. பலர் உயிரிழந்தனர். இதனை இஸ்லாமிய இனவாதிகளே செய்தார்கள். இதனைச் சொல்வதற்கு அச்சப்படவேண்டியதில்லை.

கிழக்கு மாகாணத்தில் அரபுப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் 2016ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டபோது அது தொழிநுட்பப் பல்கலைகழகம் எனக் குறிப்பிடப்பட்டது. ஆனால் ஆளுநா ஹிஸ்புல்லா அரபு நாடுகளில் உள்ளதுபோல் கட்டியுள்ளார். இதற்கு நிதி யார் கொடுத்தார்கள் எனப் பார்த்தால் 10 கோடி ரூபாவுக்கு மேல் சவுதியில் உள்ள மக்களிடமிருந்து பணத்தைப் பெற்று தனிப்பட்ட பல்கலைகழகமாக இயக்கிக் கொண்டிருக்கின்றார். தேவையற்ற விடயங்களைக் கற்பிப்பதற்கான பலகலைக்கழகமாகவே இது இருக்கின்றது. இவ்வாறான பல்கலைகழகத்துக்கு இந்துக்களும், பௌத்தர்களும் இடமளிக்கக்கூடாது.

அது அரசுடமையாக மாற்றப்பட்டு தொழிநுட்பப் பல்கலைக்கழகமாக மாற்றப்படும். அதற்கான செயற்பாடுகளை நாங்கள் தொடர்ந்தும் எடுப்போம். குருநாகல் வைத்தியசாலையில் சில முறைகேடான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதவாறு கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

நாம் மட்டக்களப்பு வைத்தியசாலைக்குச் சென்றபோதும் அநேக தமிழ் தாய்மார்கள் இவ்வாறான முறைப்பாட்டை கூறியள்ளார்கள். ஒரு பிள்ளை பெற்ற பின்னர் பிள்ளை பெற முடியாத நிலை உருவாகியுள்ளது. மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் அநேகமான பாடசாலைகளில் தமிழ் இனத்தவர்களை ஆசிரியர்களாகக் காண முடியவில்லை.

விஞ்ஞான, கணித பாட ஆசிரியாகளாக 80 வீதமானவர்கள் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்குக் கல்வி அமைச்சு என்ன செய்துள்ளது. இவ்வாறு கிழக்கில் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பல நூற்றுக்கணக்கான காணிகளை அபகரித்துள்ளார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இவ்வாறான விடயங்களில் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கு இடையில் பலமான அமைப்பை உருவாக்கவேண்டும். தமிழ் தரப்புக்கு எதிர்கட்சி அந்தஸ்து கொடுத்தபோதும் அவர்கள் வடக்கில் பிரச்சினை என்றார்களே தவிர தீர்வைக் கொடுக்கவில்லை–என்றார். (ஐ)

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார். எனினும் அவர் தொடர்பான மேலதிக விவரங்கள் அறிய முடியவில்லை என யாழ். போதனா வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் 19 வயதுடைய இளைஞர் நேற்றுப் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்தவர், தகவல் எதனையும் வழங்காமல் அங்கிருந்து சென்றுவிட்டார்.

படுகாயமடைந்த இளைஞர், முழுமையான சுயநினைவற்ற நிலையில் தனது பெயரை மித்திரன் எனத் தெரிவித்துள்ளார். அவர் சத்திர சிகிச்சைக்காகச் சத்திர சிகிச்சைக் கூடத்துக்குக் கொண்டு சென்றவேளை உயிரிழந்துள்ளார்.

அதனால் அவரது சடலம் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. எனினும் இளைஞர் தொடர்பான விவரங்களோ அல்லது விபத்துத் தொடர்பான விவரங்களோ அறியக்கிடைக்கவில்லை என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.(ஐ)

## கைதாகியுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து மௌலவி ஒருவர் கைது செய்யப்பட்டார். கொச்சிக்கடை, போரதோட்டையில் வசிக்கும் இந்த மௌலவிக்கு நான்கு மனைவிகளும், 28 பிள்ளைகளும் உள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மௌலவிக்கு நிரந்தரமாக எந்தத் தொழிலும் இல்லை என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வெளிநாட்டில் இருந்த அவர் கடந்த 9ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இந்நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தனது பை ஒன்றைத் தவறவிட்டுச் சென்றுள்ளார்.

இந்தப் பை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காகக் கடந்த 9ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்தப் பையில் சில முக்கிய ஆவணங்கள், கடிதங்கள் காணப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தப் பயணப் பொதியில் பொதுபல சேனா அமைப்புடன் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் அண்மையில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்தும் கடிதங்கள் இருந்தன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ரிஷாத் மீதான குற்றச்சாட்டுகள் பொய்யானவையாம்!

தற்கொலைத் தாக்குதல் நடத்திய சஹ்ரான் ஹாசீமுடன் ரிஷாத் பதியுதீன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், அவர் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தார் என்றும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் பொய்யானவை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

ரிஷாத் மீது சுமத்தப்பட்டிருப்பது அப்பட்டமான பொய்க்குற்றச்சாட்டாகும். அதனை மனச்சாட்சியுடன் கூறுகின்றேன்.

அவர் உண்மையில் சஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை இராஜிநாமாச் செய்வதற்கு நான் அனுமதி வழங்கி இருக்க மாட்டேன் –என்றார்.

## மதுபானச்சாலைகள் இரு தினங்கள் பூட்டு

கொழும்பு, ஜுன் 15

நாடு முழுவதும் இன்றும், நாளையும் அனைத்து மதுபானச்சாலைகளும் மூடப்படவேண்டும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

பௌத்தர்களின் திருநாளான பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இந்த அறிவிப்பை மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் வட மாகாணத்தை மையப்படுத்தி ஆயுத வன்முறையிலும் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வரும் ஆவா குழுவினரால் நடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

ஆவா குழுவினரின் பிரச்சினை தொடர்பாக ஜனநாயக ரீதியிலான கலந்துரையாடலை அக்குழுவினருடன் மேற்கொள்வதற்குத் தான் தயாராக இருக்கிறார் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார். ஜனநாயகத்திற்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையையும் நாட்டின் எப்பகுதியிலுமுள்ள எந்தச் சமூகத்தின் மீதும் மேற்கொள்ள அனுமதிக்க முடியாது. எந்தவொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்குச் சிறந்த வழி ஜனநாயக ரீதியிலான கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதேயாகும்" – என ஆளுநர் வலியுறுத்தினார். இதற்காகத்தான் எந்நேரமும் தயாராக இருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

"நான் நேரிலே சென்று ஆவா குழுவினரைச் சந்தித்து அவர்களுடைய பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளேன். வடக்கு மக்களின் வாழ்க்கையைச் சிதைப்பதற்கான காரணம் என்ன என அவர்களிடம் வினவவுள்ளேன். இதற்காக எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி அவர்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். இது தொடர்பான பகிரங்க அழைப்பை அவர்களுக்கு விடுக்கிறேன்." – இவ்வாறு வடக்கு ஆளுநர் தெரிவித்தார் என அவரின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; இதுவரை 102 பேர் கைது

கொழும்பு, ஜூன் 15

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரை 102 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சதேகநபர்களில் 77 பேர் குற்றப் புலனாய்வுப் பிரிவிலும் 25 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

# வெளிநாட்டுத் தூதுவர்கள் சந்திப்பை தவிர்த்த முஸ்லிம் அரசியல்வாதிகள்

கொழும்பு, ஜூன் 15

அண்மையில் பதவி விலகிய முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பில் அமெரிக்கா ,இந்தியா மற்றும் சீனத் தூதுவர்களைச்சந்திக்கவிருந்தனர். ஆனால் இறுதி நேரத்தில் அந்தச் சந்திப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டன.

வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பிரச்சினைகளைக் கூறினால் அது இப்போதிருக்கும் அரசியல் சூழ்நிலையில் தவறான அபிப்பிராயத்தைக் கொடுக்கலாமெனவும் – உள்ளகப் பிரச்சினைகளை வெளிநாடுகளுக்குச் சொல்ல முஸ்லிம்கள் முயல்வதாக சொல்லப்படலாம் என்பதாலும் இந்தச் சந்திப்புக்கள் தவிர்க்கப்பட்டன எனத் தெரிகிறது .

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஒன்று கூடிய முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த முடிவை எடுத்தனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

# இந்திய மீனவர்கள் 18 பேர் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 18 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நீதவான் நளினி கந்தசாமி முன்னிலையில் மீனவர்கள் ஆஜர்படுத்தப்பட்டமையையடுத்து, அவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர் எனக் கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெயராஜ சிங்கம் சுதாகரன் குறிப்பிட்டார்.

சட்ட மா அதிபரின் பரிந்துரைக்கு அமைய அந்த மீனவர்கள் தொடர்பில் கடற்றொழில் திணைக்களத்தால் நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மீனவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காது அவர்களை விடுதலை செய்யுமாறு சட்ட மா அதிபர் பரிந்துரை செய்திருந்தார் என கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கூறினார்.

அதற்கமைய, பருத்தித்துறை நீதவான் இந்திய மீனவர்கள் 18 பேரையும் விடுதலை செய்தார்.

எனினும், அந்த மீனவர்களின் மூன்று படகுகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (ஐ -07)

# யாழ். நகரப் பகுதியை அண்டி பெருமளவு வெடிபொருள்கள்!

## மறைத்துவைக்கப்பட்ட நிலையில் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்.நகரப் பகுதியை அண்டிய தீவு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு அபாயகரமானவெடிபொருள்களைபடையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மீட்டிருக்கின்றனர்.

இந்தச்சம்பவம்நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்தச் சோதனையை நடத்தியிருந்தனர்.

இதன்போது மிக அபாயகரமான பெருந்தொகை வெடிபொருட்களை பொலிஸார் மீட்டிருக்கின்றனர். இதனுள் டெட்டனேட்டர்கள், சீ -4 வெடிமருந்து மற்றும் பல வெடிமருந்துகள் பாதுகாப்பாக பொதி செய்யப்பட்டு புதைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. (ஐ -07)

# 11 இளைஞர்கள் கடத்தல்; சந்தேகநபருக்குப் பிணை

கொழும்பு, ஜூன் 15

11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள 11ஆவது சந்தேகநபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வழக்கின் 11ஆவது சந்தேகநபரான கடற்படையின் சஞ்ஜீவ பிரபாத் சேனாரத்ன உள்ளிட்ட சந்தேகநபர்கள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெத்திகே முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, 11ஆவது சந்தேகநபரை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும், ஒன்றரை இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் நீதிபதி விடுதலை செய்தார்.

சந்தேகநபரின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை விதித்த மேல் நீதிமன்ற நீதிபதி, மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

கடந்த 2008ஆம் ஆண்டு வெள்ளை வானில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து தீவிர ஆலோசனையில் மைத்திரிபால!

கொழும்பு, ஜூன் 15

உடனடியாக நாடாளுமன்ற தேர்தல் ஒன்றிற்கு செல்வது குறித்து ஜனாதிபதி தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

தற்போதைய அரசியல் குழப்பங்களுக்குத் தீர்வாக நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை அறிவிப்பதில் உள்ள சட்டச் சிக்கல்கள் குறித்து ஜனாதிபதி கலந்துரையாடல்களை நடத்தி வருகிறார்.

அரசியல் குழப்பங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுதான் முதலில் வரும் தேர்தலாக இருக்குமெனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிரடியாகக் காய்களை நகர்த்தி வருகிறார்.

உடனடியாக நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்து அவர் ஆலோசித்து வருகிறார் எனத் தெரிய



வருகின்றது.

நான்கரை வருடங்களின் முன்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்கமுடியாது என்ற 19ஆவது திருத்தத் தடையைக் கடப்பது குறித்து ஜனாதிபதி சட்ட வட்டாரங்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

ஏற்கனவே நாடாளுமன்றத்தை கலைத்து உயர்நீதிமன்றம் அதை இரத்து செய்த அனுபவத்தில், வேறுவிதமாக நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கலாமென ஜனாதிபதிக்கு ஆலோசனை சொல்லப்பட்டுள்ளது.

அந்த ஆலோசனையின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்கு உடனடியாகச் செல்வதற்கு மக்கள் ஆணையைக் கோரும் விதமாக, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தலாமெனச் சட்ட வட்டாரங்களால் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சட்டமா அதிபரை அழைத்த ஜனாதிபதி உடனடியாக சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லலாமா என ஆலோசனை கேட்டுள்ளார். இதையடுத்து, உடனடி நாடாளுமன்றத் தேர்தலுக்கான சர்வஜன வாக்கெடுப்பு குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது. (ஐ)

# தஜிகிஸ்தான் ஜனாதிபதியை சந்தித்தார் மைத்திரி!

*கொழும்பு, ஜூன் 15*

*தஜிகிஸ்தானுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கு தஜிகிஸ்தான் ஜனாதிபதி இமோமலி டிஸ்னாபேவைச் சந்தித்து இரு தரப்பு பாதுகாப்பு மற்றும் நட்புறவு குறித்து பேச்சு நடத்தினார். (ஐ)*



# சிறைச்சாலைகளில் 114 பட்டதாரிகள்

கொழும்பு, ஜூன் 15

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 24,000 கைதிகளிடையே 114 பேர் பட்டதாரிகள் எனச் சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பட்டதாரிகளில் பெண் ஒருவரும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள், நிதி மோசடி, போலி ஆவணங்களைத் தயார் செய்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், இவர்கள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். (ஐ)

# கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் யுனெஸ்கோ மாநாட்டில் பங்கேற்பு



கிளிநொச்சி, ஜூன் 15

யுனெஸ்கோவின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ள செயலமர்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ் தாய்லாந்து தலைநகர் பாங்கொக் செல்கின்றார்.

எதிர்வரும் 17ஆம்,18 ஆம் திகதிகளில் 'ஒருவர் பின்னால் மற்றொருவர்' எனும் தலைப்பில் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளில் புலம் பெயர் பிரதேசங்களின் கல்வி நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒருவராகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தாய்லாந்து பயணமாகிறார். (ஐ)

# மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது!

கொழும்பு, ஜூன் 15

பொகவந்தலாவ டின்சின் விவசாய – பண்ணைக்குப் பின்னால் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 4 சந்தேக நபர்களை பொகவந்தலாவ பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

பொகவந்தலாவ பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதோடு சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களுக்கும் நேற்றுப் பொலிஸாரினால் பிணை வழங்கப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் 18 ஆம் திகதி ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# *ஸஹ்ரானின் சகாக்களென இருவர் கைது!*

கொழும்பு, ஜூன் 15

பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரும் இராணுவமும் இணைந்து கண்டி ஹிங்குல பகுதியில் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலில்,தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் ஸஹ்ரானின் நெருங்கிய சகாக்கள் எனக் கூறப்படும் இருவர் கைதாகினர் எனப் பொலிஸார் கூறினர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 15.06.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.